MR K. JEYAKUMAR MAAT, FIAB
MRS T. JEYAKUMAR B.A.(CEY)
64 GLENCOE AVENUE
NEWBURY PARK
ILFORD, ESSEX IG2 7AN



லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்ச்சஞ்சிகை

# அலை ஓசை

# *Alai Osai*

ALAI- 7 OSAI - 2
MAR - MAY 1992

KUMARANS

# குமரன்ஸ் தமிழ்க்கடை

**Walthamstow Branch**
142, Hoe Street,
Walthamstow
London E17 4QR
TEL: 081 521 4955
FAX: 081 521 9482

**Central London**
69, Holloway Road,
Highbury & Islington,
London N7 8JZ
TEL: 071 - 609 1912
FAX: 071 - 609 0501

Sri Lankan Off Licence

# TAMIL MARRIAGE BUREAU

TMB



உங்களின் எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப மணமகன் மணமகளைத் தெரிவு செய்து பொருத்தம் பார்த்து உங்களுக்கு அறியத்தரும் அலுவலகம் TMB

உங்களின் அனைத்து வேண்டுகோள்களையும் நாங்கள் இந்தப். பொருத்தம் பார்த்தலில் கவனத்துக்கு எடுத்துக் கொள்வோம். உங்களின் கோரிக்கையுடன் சாத்திரப் பொருத்தமும் பார்க்கப்படும்.

தேவையேற்படின் திருமணங்கள் பல நாடுகளிலிருந்தும் (U.K, CA^NADA, AUSTRALIA,USA, NORWAY, FRANCE, GERMANY, INDIA, SRILANKA) ஒழுங்குசெய்து தரப்படும்.

உங்கள் இலவச விண்ணப்பப் பத்திரங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

TMB

142, HOE STREET LONDON E17 4QR
TEL: 081 767 7834 FAX: 081 521 9482

Your Future Is Our Concern

# இது பெண்கள் சர்வதேச தினத்தினையும் மட்டக்களப்புத் தந்த மாமேதை விபுலானந்த அடிகளார் அவர்களது நூறுவது ஆண்டு நினைவு விழாவினையொட்டியும் எழுதப்படும் கட்டுரை

பங்கயமணாளன்

அகப்பையை வீசி எறிந்து விட்டுக் குசினிக்குள்ளிருந்து புறப்பட்டு வருவது தான் பெண்களின் புரட்சியென்ற ஒரு குறுகலான அபிப்பிராயத்தை முன் வைத்து வாதிப்பவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் எனக்கு இவர்கள் மீது மிகுந்த வருத்தம் ஏற்படுகின்றதேயொழிய இவர்களது வாதங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆதாரங்கள் என் கண்முன் தெரிவதில்லை.

'சமத்துவம்' என்பது கேட்பதற்கும் பேசுவதற்கும் அழகான ஒரு வார்த்தை. எந்த அடிப்படையில் சமத்துவம் கோருகிறோம் என்பதிற்றான் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு வளமும் கலாச்சாரச் செறிவும் கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியவையாயிருக்கின்றன.

நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் கொண்ட புதுமைப்பெண்ணைப் பார்க்கும் ஆசையும் ஆர்வமும் உணர்வும் ஊக்கமும் எனக்கு நிறைய உண்டு. 'உணர்ச்சிகள் எரிகின்றன' என்ற ஒரு நாவலை எழுத வேண்டுமென்ற உந்தல், எனது இளைய காலங்களில் என் நெஞ்சில் இருந்தது.

ஓர் ஆசியப் பெண்ணின் சடலம் எரிந்து கொண்டிருக்கின்ற ஓர் காட்சியையும், அச்சடலத்துடன் அவள் உயிரோடு உயிராக அமுக்கி, அடக்கிவைத்த உணர்வுகளும், அபிலாசைகளும், சேர்ந்து எரிகின்றன என்ற கருத்தினையும் கருவாகவைத்து, உணர்ச்சிகள் எரிகின்றன என்ற நாவலை எழுத எண்ணினேன். ஏனோ எப்படியோ அந்த நாவலை எழுதிடும் வாய்ப்பு எனக்கு ஏற்படாமற் போய்விட்டது. ஒரு வேளை நாவல் எழுதிடும் ஆளுமை எனக்கு இல்லாதிருந்தது போலும்.

எனது தாயை, எனக்குத் தெரிந்தவரை, அவளை ஒரு விதவையாகவே நான் பார்க்கக் கொடுத்து வைத்திருந்தேன். எனது தந்தையின் முகமே எனது கண்ணுக்குத் தெரியாது. எனது ஒன்றரை வயதிலேயே, எனது தாய் விதவையாகி விட்டாள். தாலியில்லாத அவளது கழுத்து, தலைவனில்லாத அவளது வாழ்வு, குங்குமம் படாத அவளது நெற்றி, பூச்சூடாத அவளது கூந்தல் ஆலயமேறுத் அவளது அடிகள் கல்யாணம் காட்சி காணுத அவளது கண்கள், வெள்ளைப் புடவையினுள்ளே, அவள் வெட்டிச்சரித்த சந்தோச உணர்வுகள் அவள் கணவன் விட்டுச் சென்ற.... கனவுகள்... நினைவுகள், அவற்றின் விம்பங்களாய்.... அவள் முன்னே... நாங்கள் எண்மர் காலையும், மாலையும் எனது தந்தையின் திருவுருவப் படத்தின் முன்னே அந்தத் தெய்வங்களின் திருவுருவப் படங்களின் முன்னே.... அவள் நெஞ்சு விட்டுப் பாடி ... அழும் கோலம், என் உயிரிற் பிணைந்து விட்ட காட்சி

இத்தனைக்கும் மத்தியில்...
அநீதியையும், அதர்மத்தையும் கண்டு
கொதித்தெழக்கூடிய நெஞ்சுரமும்,
வாக்குவன்மையும் அவளிடம் சங்கமித்துக்
கிடந்ததை. நான் உணர்ந்திருக்கிறேன்.

சங்க இலக்கியங்களையும், சத்தியம்,
தர்மம் பேசும் புராண இதிகாசங்
களையும் புரிந்து, புரியவைக் கக் கூடிய
ஒரு புலவனின் மனைவி தானென்
பதை... அவள் உணர்த்திய இடங்
களை நான் பல தடவைகளில் கண்டு .
.. வியந்திருக்கின்றேன். பாடலை
எழுதியவுடன், அதன் அர்த்தத்தினைத்
தன்னோடு பகிர்ந்து கொண்டு, அதி
லுள்ள குறை நிறைகளைப் பற்றித் தனது
கருத்தினையும் கேட்டுத்தெரிந்து
கொள்ளக் கூடிய ஒரு தலைவன். ஒரு
முது புலவனுடன் தான் வாழ்ந்தவள்
என்பதில் மாறாத பெருமையுணர்வு
கொண்டிருந்தவள் என் தாய்!
சத்தியம் வெல்லும்.

தர்மம் தழைத்தோங்கும் என்ற தாரக
மந்திரங்களைத் தன்னுள்ளே கொண்டு...
ஒரு தாரணி போல எம்மைத் தாங்கி
நின்ற என் தாய், எனது பத்தொன்பது
வயதிலே எங்களை விட்டுப் பிரிந்தாள்.
அவளது உடல் தான் என்னை விட்டுப்
பிரிந்ததேயொழிய அவள் எனக்குப்
போதித்த பாடங்கள் என்னை இன்றும்
வளர்த்துக் கொண்டிருக்கின்றன.
அவளது நம்பிக்கைகள், பிரார்த்த
னைகள் என்னை வாழ வைத்துக் கொண்
டிருக்கின்றன.

அந்தத் தாயின் நிழலில் நின்றுதான்
பெண்கள் புரட்சியைப் புரிந்து கொள்ள
எத்தனிக்கின்றேன்.
பெண்ணடிமையின் பிரதான அங்கங்
களின் ஒன்றான 'சீர்வரிசை'
விலங்கினைச் சிதறடிக்க முயல்பவர்க
ளுடன் நானும் இணைந்து கொண்டவன்.
பெண்ணின் பெருமையைப் பேசி
முழக்கமிடுவதோடு பெண்களின்
சமத்துவம் ஏற்பட்டுவிட முடியாது.

பெண்ணடிமையைச் சாகடித்துவிட
முடியாது. புரட்சியென்பது மரபு
மீறல்களென ஒரு சிலர் அர்த்தம்
காண்கிறார்கள். ஒரு சமுதாயத்தின்
பண்பாட்டுக் கலாச்சார மரபுகளை
மீறுவதற்கு முன்னர் அம்மரபுகளின்
ஆழமான அர்த்தங்களைப் புரிந்து
கொண்டு இம்மரபு மீறல்களால்
ஏற்படக் கூடிய நீண்ட காலவிளைவு
களைச் சிந்திப்பது அவசியமாகிறது.

ஒவ்வொரு சமுதாயமும் காலத்தோடு
சில மாற்றங்களை ஏற்றுக் கொள்வதென்
னவோ உண்மைதான். ஒரு காலத்தில்
சிந்திப்பதற்கும் அருவருப்பான விட
யங்கள் சிரிப்பதற்கு மட்டும் ஏற்றுக்
கொள்ளப்பட்டுப் பின்னர் நடைமுறை
யிற் காணப்படக்கூடிய அளவிற்கு வாழ்
வோடு கலந்து கொள்வதை நாம் அனு
பவத்தில் காணத்தான் செய்கிறோம்.

அண்மைக் காலங்களில் எமது தாய்
நாட்டின் விடுதலைப் போராட்டத்தின்.
விளைவாக நமது இனம் நாடோடிகளா
கப் புலம் பெயர்ந்து வாழ்வதையும்,
அவ்வவ் நாடுகளுக்குரிய கலாச்சாரப்
பண்பாட்டு மரபுகளை மனதார ஏற்
றுக் கொண்டோ அன்றேல் ஏற்றுக்
கொள்ளாமலோ தமது வாழ்விற்
படர விட்டுக் கொள்வதை... நாம்
பார்க்காமலில்லை. அந்நியக் கலாச்
சாரப் பண்பாட்டு ஊடுருவல்களைத்
தவிர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்
பும், வசதியும் நம்மை விட்டுப் போய்க்
கொண்டிருக்கிறது. பிறர் நம்மை
இனங்காணும் தன்மையை மட்டு
மன்றி நம்மை நாமே இனங்

கண்டு கொள்ளக் கூடிய தன்மையை நாம் இழந்து கொண்டு செல்வதற்குரிய பெரிய காரணம் நமக்கு நாடின்மை என்பதே. எனது தாழ்வான அபிப்பிராயமாகும்.

ஏனைய கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும் இழிவுபடுத்துவதோ, தாழ்வுபடுத்துவதோ எனது நோக்கமன்று. எமது நாட்டின் பேரறிஞர், மட்டக்களப்புத் தந்த மகான் விபுலானந்த அடிகளார் கிழக்கு மேற்கு நாகரீக வேறுபாடுகளை அவரது கட்டுரை ஒன்றில் விளக்கியுள்ளதைப் படித்திருக்கின்றேன்.

பிறப்பு, இறப்பு, வாழ்வு... இவை குறித்த நம்பிக்கைகளே எமது கலாச்சாரப், பண்பாட்டு மரபுகட்கு மையமாகின்றன என்பது எனது கருத்தாகும். மரபுகளை மாய்த்துவிட்டு வா! புதியதொரு பூமியில் விளையாடுவோம் என்று புதிய கவிகளையும், இலக்கியங்களையும் படைப்பவர்களையும் நாம் சந்திக்கமலில்லை.

'இலக்கணத்தை மீறுமுன்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைப் படித்த ஞாபகம் எனக்குண்டு! எழுதியவர் தமிழகத்தின் எழுத்தாளர் ஜெயகாந்தனென நினைக்கின்றேன். இலக்கணத்தை மீறுமுன், அந்த இலக்கணத்தை அறிந்து, புரிந்து கொள்ளுதல் அவசியமென்ற கருத்துப்பட அவர் எழுதியது போன்ற ஞாபகம் எனக்கிருக்கின்றது. மரபுகளை மீறுவது சரியா தப்பா என்பதற்கு முன்னர், மரபுகளைத் தெரிந்து புரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மரபுகள், பிற்போக்குத் தனமானவையென்று மிகவும் கலபமாகத் தூக்கி வெறியும் சிலரிடம் அதற்குரிய அனுபவ ஆழமும், சிந்தனைச் செறிவும் பண்பாட்டு அறிவும், கலாச்சாரப் புரிந்துணர்வும் இருக்குமோ என்பதில் எனக்கு நிறையச் சந்தேகமுண்டு. சந்தர்ப்பவாதம், சுயமுன்னேற்றம், சுயநலம், இவை சார்பாகத் தமது மரபுகளை மாய்த்துவிடுபவர்கள், ஏனைய கலாச்சாரப் பண்பாட்டு மரபுகளை நியாயப்படுத்துவதில் மிகவும் அக்கறையும், அவதானமும் செலுத்துவதை எளிதிற் கண்டு கொள்ளமுடியும்.

கடந்த பதினெட்டு ஆண்டுகளாகப் பிரித்தானிய நாட்டுத் தொடர்பு எனக்குண்டு. பிரித்தானிய மக்களின் பண்பாட்டுக் கலாச்சார விவகாரங்களிலும் நாளுக்கு நாள், கணத்துக்குக் கணம் பலவித மாறுதல்கள் ஏற்படுவதை நாம் காணக்கூடியதாயுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்னர், வயோதிபர் விடுதியொன்றில், பகுதி நேரவேலை பார்த்தேன். அந்த நாட்களில், பலதரப்பட்ட வயோதிபர்களுடன் மனம் விட்டு உரையாடக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

இந்நாட்டில் அறுபதுகளில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் பற்றி அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இம்மாற்றங்கள், தமது நாளைய சந்ததியினர்க்கு நன்மை விளைவிப்பனவா அல்லேல் தீமை விளைவிப்பனவா என்பதில் அவர்கள் ஒருமுகப்பட்ட கருத்துள்ளவர்களாக இருந்தார்கள். அறுபதுகளிற் பிரித்தானிய சமுதாய அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் தமது இனத்தின் எதிர்காலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியன என்ற தமது கவலையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

காதல், திருமணம், குடும்பம், பெற்றோர், பிள்ளைகள் என்பன பற்றிய தமது நம்பிக்கைகள் தள்ளாடுகின்றன என்ற ஏக்கத்தினை அவர்கள் வாயிலாக அறிந்து கொண்டேன்.

ஆரோக்கியமான ஒரு சமுதாயம் பற்றிய

கருத்துக்கள் இன்றும், இன்னும் பிரித்தானிய மக்கள் பலரிடம் ஆழமாக ஊன்றிக் கிடக்கின்றன. குறிப்பாகக் குடும்பம் பற்றிய மாற்றங்கள் ஆதங்க மும் வேதனையும் இவர்களைப் பிணைத்துக் கிடக்கிறது சமுதாயக் கட்டுப்பாடு களைப் பிற்போக்கு வாதமெனக் கருதுபவர்கள் நம்மிடையே உள்ளார்கள். தனி மனித நடவடிக்கைகள்சமுதாய மனித நடவடிக் கைகளுடன் தொடர்புபடுத்துவதில் கீழைத்தேய நாகரிகம் மிகவும் அக்கறை செலுத்திவந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

உளவியல் சார்பான மனோதத்துவ ரீதியாக பின்விளைவுகளை முன்வைத்தே சமுதாய மனித நடவடிக்கைகளை நம்முன்னோர் கட்டுப்படுத்தியுள்ளனர். மருத்துவரீதியாகவும், மனோதத்துவ ரீதியாகவும் தனிமனித நடவடிக்கைகளை குடும்ப சமுதாய நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தி வந்துள்ளனர்.

மனத்தின் பலத்தையும் பலவீனத்தையும் அடிப்படையாகக் கொண்டே பண்பாட்டுக்கு வரைவிலக்கணமும் அதற்கு விதிவிலக்குகளையும் விதித்தனர். ஆத்மீக வளர்ச்சி தராத கல்விக்கு நம்மவர் மத்தியில் வரவேற்பிருக்க வில்லை. அழிவு நோக்கிய பௌதீக வளர்ச்சி விருந்தோம்பற் பொருளாதாரம் வரவேற்புப் பெறவில்லை. தாய்மை தெருவில் விலைபேசப்படவில்லை. குடும்பக்குலைவுகள் சீரணிக்கப்படவில்லை.

பிள்ளைகள் அவர்களின் எதிர்காலம் என்ற சிந்தனை குடும்ப வாழ்வின் அடிப்படையாகக் கருதப்பட்டது. தந்தை, தாய், பேரன், பேர்த்தி, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மாமன், மாமி, மச்சான், மச்சாள் என்ற உறவு முறைகள் வலியுறுத்தப்பட்டு வந்தன.
உலகம் என்ற பார்வைக்குப் பயப்படுகின்ற ஒரு பண்பாடு எமது முன்னோரின் மரபாகியது. உலகம் பழிக்கும் என்ற உணர்வு எமது முன்னோரின் ஆத்மாவில் ஊறிக் கிடந்தது. தெய்வம் நின்றறுக்கும் என்ற வழிமொழி நமது மரபுகளை வழிநடத்தியது.

சத்தியம் வெல்லும். தர்மம் வாழவைக்கும் என்ற வாய்மொழிகள் நம் மரபுகளுக்கு வழி கண்டன. மரபுகளை மாய்த்துவிட்டுச் சமத்துவம் என்ற புது மரத்தின் நிழலில் காற்று வாங்கும் எண்ணம் எனக்கு இன்னமும் வரவில்லை.

வேற்று நாடுகளில் அடியெடுத்து வைத்து விட்டவுடன் அந்நாடுகளில் உள்ள சாதாரண மக்களே அருவருத்து ஒதுக்கக்கூடிய மரபு மாற்றங்கள் மீது மோகங்கொண்டு புதுப்புல்லுக் கடிக்கும் இளங்கன்றுகள் போல நம்முட் சிலர் புரட்சி செய்ய விளைந்து நிற்பது வேதனைக் கும் அருவருப்புக்கும் உரிய செயலா கின்றது. நாடின்மை காரணமாக ஏனைய நாடுகளுக்கும் புகுந்து கொண்டு வாழ வேண்டிய பொல்லாத காலம் நம்மைப் பிடித்துக் கிடப்பது என்னவோ உண்மைதான். ஆனால் அதைக் காரணமாக வைத்து எதிர்காலத்திற்கு ஆரோக்கியம் தரமுடியாத சமூக மாற்றங்களைத் தமது சந்தர்ப்ப வாதத்திற்கும் சுய முன்னேற்றத்திற்கும் சுய நலத்திற்கும் சாதகமாக்கிப் புரட்சிவாதம் பேசும் பொறுப்பற்ற வர்கள் வெற்றி பெறக்கூடாதென்பதே எனது பிரார்த்தனையாகும்.

## கிழக்கிலங்கையில் தமிழர்கள் முஸ்லிம்கள் படுகொலை

மட்டக்களப்பு பொலநறுவ எல்லையில் உள்ள அழிஞ்சிபொத்தான என்ற கிராமத்தில் நடந்துள்ள இச்சம்பவத்தில் 74 பேர் கொல்லப்பட்டுள்ளனர் 15 பேர் காயமடைந்தனர். இவர்களில் 56 பேர் முஸ்லீம்கள் எனவும் பாதுகாப்புப்படை வட்டாரத்தகவல்கள் கூறுகின்றன. அதன் பின்னர் கரபொலஇ முத்துகல தமிழ்க்கிராமங்களில் பதில் தாக்குதல் நடாத்தப்பட்டதில் 54 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 57 பேர் காயமடைந் தனர். அழிஞ்சிப்போத்தான கிராமத்தில் முன்னர் நிலை கொண்டிருந்த இராணுவம் பின்னர் விலகி பொலிசாரிடம் பாதுகாப்புப் பொறுப்பு கையளிக்கப்பட்டது. 26 பொலிசாரும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் 12 ஊர்க்காவலர்களும் அங்கு இருந்தனர்.

## அகதிகள் வருகை

இந்தியாவில் இருந்து இதுவரை 5120 குடும்பங்களைச் சேர்ந்த 17,162 அகதிகள் திரும்பி வந்துள்ளனர். 2.5.92 அன்று 500 பேர் வந்திறங்கினர். அத்தோடு இரு விமானங்களில் 200 பேர் வந்தனர். திருகோணமலைக்கு ஒரு நாளைக்கு 3 விமானங்கள் வருகின்றன.

## தூதுக்குழுக்கள் மூலம் புலிகள் சமாதான யோசனை

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர்கள் ஒன்பது ஆண்டு காலப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான யோசனைகளை பௌத்த பிக்குமார் தூதுக்குழுவிடம் கையளித்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. அந்த யோசனைகள் எவை என்பதை வெளியிட மறுத்துவிட்ட பிக்குமார் அந்த யோசனைகளை அரசிடம் சமர்ப் பிக்க இருப்பதாகத் தெரிவித்தனர்.

## பௌத்த பிக்குகளின் யோசனைகளை புலிகள் நிராகரிப்பு

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பௌத்த பிக்குமாரால் கொண்டு வரப்பட்ட 13 அம்சக்கோரிக்கைகளை புலிகள் நிராகரித்திருப்பதாக யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன. மூன்று இன மக்களினதும் பொதுத்தாயகம் இலங்கை என்ற கோட்பாடு இனப்பிரச்சனையின் மூலாதாரமான அடித்தள அம்சத்தையே நிர்மூலமாக்குகிறது. எனவே உங்கள் இதர யோசனைகளை பரிசீலிக்கும் அவசியத்தையும் அது இல்லாததாக்கி விடுகிறது எனப் புலிகள் தெரிவித்தனர்.

# இலங்கைச் செய்திகள்

தொகுத்தளிப்பவர் – தென்னவன் –

நீங்கள் நினைப்பது போல் புலிகளை தோற்கடிப்பது என்பது எனது கருத்துப்படி வடக்கு கிழக்கிலுள்ள ஒவ்வொரு தமிழர்களையும் தோற்கடிப்பதற்கு சமனாகும். ஒருவிடயம் தெளிவாகிறது நீங்கள் புலிகளை மற்றைய தமிழர்களிடமிருந்து ஒதுக்க முடியாது. புலிகளை முற்று முழுதாக அழிப்பதென்பது தமிழ்மக்களை அழிப்பதேயாகும். தமிழ் மக்கள் இருக்கும் வரை புலிகளும் இருப்பார்கள்.

சண்டே டைம்ஸ் இற்கு அமைச்சர்தொண்டமான்அளித்த பேட்டியிலிருந்து.

கே – நீங்கள் புலிகளின் பலத்தை எப்படி மதிப்பிடுவீர்கள்?

ப – உலகிலேயே திறைமையான பயிற்சியும், கட்டுப்பாடுமுள்ள மிகத்திறைமையான கெரில்லா இயக்கம் புலிகள்.

கே – பிரபாகரனைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப – 1983 ம் ஆண்டு தொடக்கம் பாதுகாப்புப் படைகளிற்கெதிராக தனது இயக்கத்தின் போரை தன்னால் முன்னின்று கொண்டு நடத்த முடியும் என்று நிரூபித்துள்ளார்.

கே – பிரபாகரன் உயிருடன் பிடிபடுவார் என்று எண்ணுகிறீர்களா?

ப – அவர் ஒரு போதுமே உயிருடன் பிடிபடமாட்டார். அநேகமாக அவர் மிகப் பிரபல்யமான அந்த சயனைட் வில்லையை உட்கொண்டுவிடுவார்.

கூட்டுப்படை தலைமை கமொமாண்டர் சண்டே டைம்ஸ் இற்கு அளித்த பேட்டியிலிருந்து.

## தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை

எனது பதவிக்காலம் முடியும் வரைதேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை என ஜனாதிபதி பிரேமதாச தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது எனது பதவிக்காலத்தில் 3 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இதில் ஒன்றரை வருடங்கள் நாட்டில் அமைதியை ஏற்படுத்தவே கழிந்து விட்டது. எஞ்சிய ஒன்றரை வருடங்கள் ஏழை எளிய மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளேன். மீதி 3 வருடங்கள் மக்கள் மேலதிக சலுகைகளை எதிர்பார்க்கலாம்.

## பௌத்த பிக்குமார் குழு யாழ் சென்றனர்.

வண பலப்பிட்டிய சிறி சித்தகர்த்த தேரோ தலைமையிலான பௌத்த பிக்குமார் குழு யாழ் சென்று முதல் சுற்றுப்பேச்சுவார்த்தையை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடாத்தியுள்ளனர். பிந்திக்கிடைத்த செய்திகளின் படி 2ம் கட்டத்துடன் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து விட்டதாக அறியப்படுகின்றது.

## நோர்வே அரச பிரதிநிதிகள் இலங்கையில்


நோர்வே உயர்மட்ட அரச பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் கிழமைகளில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு மனித உரிமை மீறல் பற்றி ஆதாரபூர்வ அறிக்கையொன்றைத்தயாரிக்க உள்ளதாக அறியப்படுகிறது. இலங்கைக்கான உதவித்தொகையை கணிசமான அளவு குறைப்பதற்கு இவர்களது விஜயம் முன்னோடியாக அமையும் என நம்பப்படுகிறது.

## உடுகம்பொல நாட்டைவிட்டுத் தப்பியோட்டமா?

முன்னாள் உதவிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல அவரது சகோதரர் மேஜர் உடுகம்பொலவுடன் இலங்கையைவிட்டு வெளியேறிவிட்டதாக நம்பப்படுகின்றது. இவரது கடவுச் சீட்டை நீதிபதி பறிமுதல் செய்ய உத்தரவிடமுதலே இவர் வெளியேறிவிட்டதாக நம்பப்படுகின்றது. ஆனால் அவர் இலங்கையிலேயே உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலிகளின் கையில் கவச எதிர்ப்பு ஆயுதம்

வெலிஓயாவில் புலிகளுக்கெதிரான மோதலில் படையினரின் மிகச் சக்திவாய்ந்த கவச எதிர்ப்புத்துப்பாக்கியொன்று புலிகளினால் கைப் பற்றப்பட்டுள்ளது. RCL என அழைக்கப்படும் இக்கனரக துப்பாக்கி யின் ஒரு குண்டு ஒரு கவச வாகனத்தை அழிக்கப்போதுமானதென வும் இது ஜீப்வண்டியில் பொருத்தப்பட்டுள்ளதால் விரைவாக இடம் விட்டு இடம் கொண்டு செல்லக்கூடியதெனவும் இராணுவத்தரப்பில் சொல்லப் பட்டுள்ளது. ஆனால் பத்திரிகையாளர்களின் கேள்வியொன்றிற்குப் பதில ளித்த கேர்ணல் சரத்முனசிங்க 300 புலிகள் தமது இராணுவத் தொட ரைத் தாக்கினரென்றும் அப்போது இதுவும் எரிந்து செயலற் றுப் போயிருக்கலாமெனவும் கூறியுள்ளார்.



க. விமல் இலண்டன் வடக்கு

# அழுகின்றாள்

உள்ளத்தால் சிரிப்போரை உலகத்தில் காண்கின்றோம்
உதட்டளவில் சிரிப்போரை இலங்கையில் காண்கின்றோம்
அழுவதென்ற சாபத்தினை பெற்றிட்ட பெண்களை என்
அனுதாப அனுபவத்தால் அடையாளம் காட்டுகின்றேன்.

பிரசவத்தின் வேதனையால் பெண்ணொருத்தி அழுகின்றாள்
பிரசவித்த குழந்தையோ பெண்ணென்று அழுகின்றாள்
பிறந்துவிட்ட குழந்தையதோ பால்கேட்டு அழுகின்றாள்
பால் கொடுக்க வழியின்றி தாயங்கே அழுகின்றாள்.

சீதனத்தின் கொடுமையால் சீரழிந்தவள் அழுகின்றாள்
சீதையின் சோதனையிலும் தனக்கு மேல் என்று அழுகின்றாள்
கடல்தாண்டி வந்தவனை கண்டொருத்தி அழுகின்றாள்
கற்பிழந்த மங்கையங்கே கதறியே அழுகின்றாள்.

பொட்டுடன் பூவையும் இழந்தொருத்தி அழுகின்றாள்
பெற்றதன் தனயனை இளந் தன்னை அழுகின்றாள்
விடிந்திடும் பொழுததை நினைத்தொருத்தி அழுகின்றாள்
பேதை தன் காதலனை பிரிந்தங்கே அழுகின்றாள்

பயங்கரப் போரிடும் பாவையும் அழுகின்றாள்
பாரத வீரனால் பழிவாங்கிய தோழனை நினைத்தவள் அழுகின்றாள்
இத்தனை பெண்களையும் பார்த்தொருத்தி அழுகின்றாள்
ஏனென்று நாம் கேட்டால் பைத்தியம் என்கின்றாள்.

# சுதந்திரம்

சுதந்திரம் என்றந்த வார்த்தையை – சொல்ல
சுதந்திரம் இல்லையே இலங்கையில்
வருந்திடும் தமிழர்கள் வாழ்விலே – அந்த
வசந்த நாள் என்றென்று வராதோ
சுதந்திரம் என்கின்ற போர்வைக்குள் – பெரும்
சுயநல நாய்களே நாட்டிலே
சுதந்திரத் தாயவள் சேலையோ – எளிய
சுயநல நாய்களின் வாயிலே
சேலையை இழந்திட்ட தாயவள் – தன்
மானத்தை இழந்தெங்கோ ஒழிந்திட்டாள்
தாயவள் சேலையை மீட்டிட – நம்
தலைவர்கள் பலர் சென்று பேசினர்
நாயுடன் பேசுதல் முறையல்ல என்றே – தன்
பிள்ளைகள் ஆயுதம் ஏந்தினர்
ஏந்திய ஆயுதம் வீழ்கையில் – சில
வீரர்கள் திசைமாறிப்போயினர்
வேண்டிய நேரத்தில் வாங்கிட – அந்த
வேலனின் கடையில் விற்பதோ சுதந்திரம்
இலங்கையில் இருக்கின்ற இந்தியன் – எம்மை
இரவினில் செல்ல தடுக்கிறான்
ஈழத்தில் பிறந்த நம் சுதந்திரம் – அந்த
இந்தியன் கைதனில் உள்ளதே
சுக்கென்றால் மிளகென்றால் சுதந்திரம் – எழிதாய்
சுப்பரின் கடையினில் வாங்கலாம்
சுற்றியே இந்தியன் இருக்கையில் – ஈழச்
சுதந்திரம் பெறுவது சுலபமோ.

இக் கவிதை இந்திய இராணுவம் நம்மண்ணில் ஆக்கிரமித்திருந்தபோது எழுதப்பட்டது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல20

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 |
| 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 |
| 49 | 50 | 51 | 52 | 53 | 54 | 55 | 56 |
| 57 | 58 | 59 | 60 | 61 | 62 | 63 | 64 |
| 65 | 66 | 67 | 68 | 69 | 70 | 71 | 72 |
| 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |

## இடமிருந்து வலம் –

1. மன்மதனின் வில் இதனால் ஆனது
6. திருநீறின் மறுபெயர்
10. விசுவாமித்திரரை மயக்கியவள்
22. எருமையை வாகனமாகக் கொண்டவர் குழம்பியுள்ளார்
37. அக்காலத்தில் வீரர்கள் போருக்குப் போகும் போது நெற்றியில் இடுவார்கள்
41. சிவபெருமானுக்கு இப்படியும் பெயர் உண்டு
51. நம் உடலில் இருந்து நீர் வெளியேறும் முறை
74. இதை எழுப்பினால் தானே விடை கிடைக்கும்

## மேலிருந்து கீழ் -

1. முகம் பார்க்கலாம்
2. கம்யூனிச ஆட்சி கவிழ்ந்த நாடுகளில் ஒன்று
3. வெற்றிலை பாக்குடன் இதையும் சிலர் மெல்லுவார்கள்
6. திரைகடல் ஓடியாவது இதைத்தேட வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (குளம்பியிருக்கிறது)
8. இதன் போது அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பார்கள்
41. ஊர் இரண்டு பட்டால் இவனுக்குக் கொண்டாட்டம்
43. மாட்டுக்குப் பிடித்த உணவு
44. ஆதவன் தலைகீழாக உள்ளான்
58. குதிரைக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு
63. தருமம் ...... காக்கும் (தலைகீழ்)
64. குழந்தை பேசும் முதல் வார்த்தை

## குறுக்கெழுத்துப் போட்டி இல -19

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 ரு | 3 மீ | 4 பு | 5 | 6 மே | 7 ன | 8 கை |
| 9 ண் | 10 | 11 | 12 கை | 13 ந | 14 | 15 | 16 தி |
| 17 | 18 பு | 19 கை | 20 யி | 21 ர | 22 த | 23 மீ | 24 |
| 25 ம | 26 ல | 27 | 28 ஓ | 29 கா | 30 | 31 ஆ | 32 னி |
| 33 ங் | 34 வு | 35 | 36 | 37 சா | 38 து | 39 ல | 40 அ |
| 41 க | 42 ர் | 43 | 44 தி | 45 ர | 46 கி | 47 ய | 48 மீ |
| 49 ல | 50 | 51 | 52 பூ | 53 ணி | 54 ர | 55 | 56 மி |
| 57 ம் | 58 ட | 59 க | 60 கி | 61 | 62 ர் | 63 கா | 64 |

# சட்டமும் சிரிக்கும்

நினைவில் நின்ற நீதிமன்ற நிகழ்வுகள்

செ. சிறீக்கந்தராசா Bse. LLM

அரிலோறென்ஸ் உவென்ட்ற் ( Harry Lawrence Wendt ) என்ற ஒருவர் அரச சட்டவுரைஞராக இருந்தார். அவர் சில ஆண்டுகளின் பின்னர் சட்டவுரைஞர் திணைக்களத்தில் சேர்ந்தார். அதன் பின்னர் நீதித்துறையில் சேர்ந்து மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்ந்தார். சிலகாலம் நீதிபதியாக இருந்துவிட்டு விரைவில் ஓய்வு பெற்றார். நீதிபதியாக இருந்த காலத்தில் அவர் சற்றுக் கடுமையான நீதிபதியாக இருந்தார். கண்ணியமான நீதிபதி யாக இருந்தபோதும் கடுமை யானவராக இருந்தமையால் அவர் வழக்கறி ஞர் களின் வெறுப்புக்கும் உள்ளானார். இதனால் பல வழக்கறிஞர்களும் வழக்குரைஞர்களும் கண்டால் கட்டாடி, காணவிட்டால் வண்ணான் என்பதற்கொப்ப நடந்து கொண்டனர்.

ஓய்வுபெற்ற பின்னர் அரி அவர்கள் தம் வாழ்நாளை நுவரேலியா வில் கழித்து வந்தார். ஒருநாள் பின்னேரம் நுவரேலியாவின் கடைத்தெரு வழியே அவர்கள் உலாப்போய் வரும்போது அவரைத் தெரிந்திருந்த வழக்கறிஞர் ஒருவர் அரிக்கு அண்மையில் வந்து தலைதாழ்த்தி வணக்கம் தெரிவித்துவிட்டு உங்களுக்கு முன்னர் தோன்றி வழக்கெடுத்துரைப்பது மகிழ்ச்சியான, மாண்பான ஒரு விடயம் ஐயா; ஏனென்றால் நீதிபதிக்குரிய சால்பும், சாந்தமும் உங்களில் மிளிர்கின்றன. நாங்கள் இன்னும் பலகாலம் எங்கள் வழக்குகளை உங்கள் முன் னிலையில் உரைக்கும் வண்ணம் இறைவன் அருள்பாலிப்பானாக.

இவ்வாறு வழக்கறிஞர் சொல்லியதும் அரி அவர்கள் "நான் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டேனென்று உமக்குத் தெரியாதா " என்றார்.

இதுவரை அரியின் முன்னிலையில் பயபக்தியாக கூனிக், குறுகிக், கோனிக், கவிழ்ந்து நின்ற வழக்கறிஞரின் முகம் இப்போது விளம்பர விளக்குப் பல்புகள் போல, செக்கனுக்கொரு

நிறம் காட்டி . மறைந்து. ஈற்றில் ஒரு பரிகாசச் சிரிப்பில் வந்து நின்றது. அவர் அந்த நீதிபதிக்குக்கிட்ட வந்து அவரின் தோளைப் பிடித்தசைத்து ஒரு தட்டுத் தட்டியபடி " அடே . அப்ப நீ இப்ப றிற்ரையர் பண்ணி விட்டாய் ஐட்சாக இருக்கேக்கை என்ன ஆட்டம் ஆடினாய் ? இப்ப எல்லாம் ஒஞ்சு போச்சு என்ன? " என்றார். அரிக்கு சீலை உரிந்தது போலாயிற்று. அங்கே நிற்க அரிக்கு முடியவில்லை. மெல்லமாக நகரலானார். பதவியில் இருப்பதாக நினைத்து அந்த வழக்கறிஞர் கூறிய வார்த்தைக்கும், பதவியில் இல்லை என்று தெரிந்த பின்னர் அந்த வழக்கறிஞர் கூறிய வார்த்தைக்கும் எவ்வளவு வேறுபாடு? இது என்ன பயித்தியக்கார உலகம்? என்று எண்ணியபடி அவர் நடந்தார். " ஐட்சாக இருக்கேக்கை என்ன ஆட்டம் ஆடினாய்? இப்ப எல்லாம் ஒஞ்சு போச்சு, என்ன? " என்ற சொற்கள் அவரின் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.


# Golden Printers

**120, Palmerston Road, Walthamstow, London E17**
**TEL: 081 - 509 0509 FAX: 081 - 509 0509**

We Undertake the following work at reasonable rates:

- Compliment Slips
- Wedding Cards
- Posters
- Letter Heads
- Business Cards
- Leaflets
- Invitation Cards
- Raffle Tickets
- Magazines
- Souvenirs
- Rubber Stamps

தமிழிலும் ஆங்கிலத்திலும்
சஞ்சிகைகள், திருமண அழைப்பிதழ்கள்,
வியாபார விளம்பரங்கள், டிக்கற்றுகள், துண்டுப் பிரசுரங்கள்
உங்கள் விருப்பத்திற்கேற்ற முறையில் குறுகிய நேரத்தில்
அழகுற அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

# மீண்டும் வசந்தம்

— சிறுகதை—

பாலமங்கை
மனோபார்க்

"ராஜா எழுந்திருப்பா ". அம்மா ஏன் இவ்வளவு நேரத்துடன் எழுப்புகிறீர்கள்? என்ன சொல்லிவிட்டு இரவு படுக்கப் போனனீ. இன்று ஒரு ஆபரேஷன் இருப்பதாகவும். அதற்கு பெரிய டாக்டர் உன்னை துணையாகப் போட்டிருப்பதாகவும் கூறினாய் அல்லவா. அதை மறந்துவிட்டாயா? உனக்கு கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை விடக்கூடாது. நீ எவ்வளவு நாளாக இப்படி ஒரு ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தனீ. ஓம் அம்மா நான் மறந்தேவிட்டேன். இப்போது நான் குளித்து ரெடியாகிக் கொண்டு வருகிறேன். நீங்கள் எனக்குக் கோப்பியை ரெடியாக வையுங்கள். மகன் குளிக்கச் சென்றதும் சமையல் அறையினுள் சென்ற பார்வதி மகனுக்கு பிடிக்குமே என்று நேற்று போட்டு வைத்த இட்டலி மாவை எடுத்து கடகட இட்டலியும் அவித்து மணக்க மணக்க சாம்பாரும் செய்து ஆவி பறக்கக்கோப்பியும் கலந்து கொண்டு வந்து மேசையில் வைக்கவும் ராஜா வரவும் சரியாக இருந்தது. என்னம்மா இன்றைக்கு இட்டலியா மணம் வீட்டையே இரண்டு படுத்துகிறது. ஆனால் எனக்கு சாப்பிட நேரமில்லை கோப்பியை மட்டும் குடித்துவிட்டு போகிறேன். ஆபரேஷன் என்றதும் டென்சனாக உள்ளது. நீ பயப்படாமல் போ. இன்றுடன் பெரிய டாக்டருக்கு உனது திறமை எல்லாம் வெளிப்படப் போகிறது. அதற்கு முன் இரண்டு இட்டலியை சாப்பிட்டு விட்டுப்போ என்றாள். அம்மாவின் மனச் சந்தோஷத்திற்காக மூன்று இட்டலியை அவசர அவசரமாக சாம்பாரில் தொட்டு வாயில் போட்டுக் கொண்டு ராஜா ஓடினான்.

ஆஸ்பத்திரிக் காம்பவுண்டினுள் மோட்டர் சைக்கிள் செல்லும் முன் அது எழுப்பிய ஒலியிலேயே நேஸ்மார் ராஜா வருவதையுணர்ந்து கொண்டு விட்டனர். ராஜா ராஜா என்கிறனே. அவனைப் பற்றியும் அவனது அழகைப் பற்றியும் உங்களுக்கு தெரியாது அல்லவா. நானும் எடுத்துக் கூறவில்லை. இப்போது சிறிது அவனைப் பற்றிக் கூறிவிடுகிறேன். நல்ல சிவந்த நிறம் இல்லாவிடினும் பார்ப்பவரை கவரும் தன்மையும் கருள் முடியும் இதை இடது வடு எடுத்து சீவி விடும் அழகும் சுத்தமாக எத்நேர

மும் உடையும் நிமிர்ந்த நடையுமே அவனை எல்லாரும் திரும்பி பார்க்க வைக்கும். சிறு வயதிலேயே தந்தையை இழந்த பின் தாயின் கவனிப்பில் வளர்ந்தவன். பரம்பரை பரம்பரையாகச் செல்வம் மிக்க குடும்பம். தாயினுடைய சொல் தட்டமாட்டான். பெண்களையே ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இவனின் பார்வைக்காக மருத்துவத்துறையில் இவனுடன் படித்த பெண்களும் இப்போது இவனுடன் வேலை செய்யும் இளம் நர்ஸ்மாரும் ஏங்காமலில்லை. இத்துடன் ராஜாவை நிறுத்தி வைத்து விட்டு பின் கதையின் நடுவே வரும் போது கூறுகிறேன். விரைவாக ராஜா ஆஸ்பத்திரியினுள்ளே சென்றதும் அவனை த் திரும்பிப் பார்த்துக் கொண்டு தன்னை பார்க்கமாட்டானு என்று ஒவ்வொரு ஏங்கிய உள்ளங்களு டனும் தங்களி னது பணியை தொடர அவரவரினது பிரிவினுள் சென்றனர். ராஜா பெரிய டாக்டரின் அறையின் வாசலில் கதவை தட்டி டாக்டர் உள்ளே வரச் சொன்னதும் சென்றான். டாக்டர் இன்று செய்யப் போகும் ஆபரேஷனை ராஜாவே தனியாக செய்யப் போவதாகவும் தான் அருகில் நின்று பார்த்துக் கொள்ளுவதாகவும் கூறி இன்று நடைபெறும் ஆபரேஷனை விளக் கத் தொடங்கினார். ராஜா மிகவும் உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்தான். விளக்கி முடிய ராஜாவைப் பார்த்து பெரிய டாக்டர் கூறினார் இது உனக்க ஒரு சின்ன சந்தர்ப்பம் தான். இது சக்சஸ் என்றால் தொடர்ந்து உனக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்று கூறி வாழ்த்தி ஆபரேஷன் தியேட்டரில் சந்திப்பதாகச் சொல்லி வெளியேறிவிட்டார்.

தனியே விடப்பட்ட ராஜா நிலைகொள்ளாத தவிப்புடன் மிகவும் பயமும் சந்தோஷமும் கலந்த நிலையில் நின்றான். ஆபரேஷன் முடிந்து வெளியில் வரும்போது பெரிய டாக்டரே இவனை புகழ்ந்து விட்டார். இவன் அவ்வளவிற்கு ஒவ்வொன்றையும் மிகவும் நிதானமாக, கவனமாக செய்ததையிட்டு ஆஸ்பத்திரி முழுக்க அன்று அவனது பெயர் அடிபடத் தொடங்கி விட்டது. மாலை நேரத்துடன் வீடு திரும்பியதும் அம் மாவின் வாயில் முதலில் இட்டது சொக்கலேட் தான். இன்று தான் ஆபரேஷன் செய்ததையும் பெரிய டாக்டர் துணையாக நின்றதையும் கூறி ஒரே ஆர்ப்பாட்டம் செய்தான். தாய் மகனுக்கு உச்சியில் முத்தமிட்டு, இனி நீ ஒரு கலியாணத்தைச் செய்யலாம் தானே. இவ்வளவு நாளும் நீ ஒரு ஆபரேஷனாவது செய்ய வேண்டும் என்ற உன்னுடைய ஆசை நிறைவேறி விட்டது என்று தனது எண்ணத் தை மெதுவாக வெளியிட்டாள். ராஜாவோ இது தான் ஆரம் பம் இன்னும் எவ்வளவோ உள்ளது என்று வாதாடினாலும், தாய் விடாது மகனிடம் கதைத்து எவ்வளவோ எடுத்துச் சொல்லித் தனக்கும் வய தாகிக் கொண்டு போகிறது, வீட்டை யும் என்னையும் உன்னையும் கவனிக்க ஒருத்தி வேண்டும் என்றாள். ராஜாவும் அம்மாவின் வற்புறுத்தலின், பெயரில் சம்மதம் கொடுத்தான்.

உடனே மறுநாளே தரகர் வைத்திய நாதனைக் அழைத்து மகனுக்கு ஒத்த பெண்ணை பார்க்கும் படிகூறிவிட்டாள்.

ராஜா கலியாணத்திற்குச் சம்மதம் கொடுத்ததிற்காகக் கோவிலுக்குப் போய்ப் பூசை செய்து விட்டுக் காரில் திரும்பும் போது வழியில் ஒரு பெண் குடை பிடித்து கையில் புத்தகங்களை ஏந்தி அழகான இளம் சிவப்பு நிற சாறி கட்டி தலைமுடியை ஒற்றைப் பின்னலிட்டு பின்னல் பின்னால் காற்றில் ஆட நடந்து சென்று கொண்டிருந்தாள். அவளினது இடை ஒரு மின்னல் வெட்டுப் போல அப்படியும் இப்படியும் அவளின் நடைக்கு ஏற்ப வளைந்து கொண்டிருந்தது. இதையே பார்த்தபடிகாரோட்டி வந்த பார்வதி மெதுவாக அவ் இளம் பெண்ணின் அருகில் காரை மெது வாக நிற்பாட்டினார். கார் தன்னருகில் வருவதை கண்ட அப்பெண் பயத்தில் அப்படியே நின்று விட்டாள். காரை அருகில் நிறுத்திப் பார்த்த போது தூர இருந்த அழகை விட இன்னும் கூடுதலாகவே அழகாக இருந்தாள். உடனேயே பார்வதி தனக்குள் கணக்குப் போட்டு விட்டாள். இவள் தான் எனது மருமகள். இதை வெளியில் காட்டாது. தான் போகும் பாதை அதாவது பயனியர் வீதி எங்கு உள்ளது என்று கேட்டார். அப்பெண் பாதையை அடையாளம் கூறியதும் நன்றி கூறிவிட்டு. அவளின் பெயரைக் கேட்டார். பெயர் வசந்தி என்றதும் என்ன வேலை செய்கிறாள் என்பதையும் மெதுவாகக் கேட்டார். அவள் புனிதா சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயத்தில் ஆசிரியை என்பதைக் கூறியதும். அவர் இவற்றை மனதில் பதிய வைத்துக் கொண்டு அவளிடம் விடை பெற்றார்.

வீடு சென்றதும் உடனடியாக வைத்தியநாதனை அழைத்து இந்தப் பெண்ணைப் பற்றி விசா ரிக்கச் சொல்ல வேண்டும் என்று எண்ணிய படி காரை விட்டு இறங்கியதும் ஓடிச்சென்று தொலைபேசி மூலம் தரகரை அழைத்து வழியில் சந்தித்த பெண்ணைப்பற்றி அறிந்து வந்து விபரங்களைக் கூறி தனக்கு மேலும் அவளைப்பற்றி அறிந்து கூறும்படி கூறினார். தரகரும் சரி என்று உடனே கூறிவிட்டார். அவரின் மனத்திலோ பெரிய இடத்து சமாச் சாரம் இதைச் செய்து கொடுத்தால் தனக்கு ஒரு கணிசமான தொகை வரும் என்பதை அவரின் மனம் கணக்கு பார்த்தது. அடுத்த நாள் விடிந்ததும் முதல் வேலையாக அப்பெண்ணைப் பற்றி விசாரிக்கச்சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். இது ஒன்றும் அறியாத வசந்தி பெண்கள் விடுதியில் தனது உற்ற தோழியான மலருடன் அன்று பாடசாலையில் நடைபெற்றவற்றைக் கூறி சிரித்துக் கொண்டிருந்தாள்.

வசந்திக்கு மலர் ஒரு உற்ற தோழி. மலரோ ஆபிஸ்சில் கணக்கா ளராக பணிபுரிகிறவள். வசதியான குடும்பத்தில் பிறந்தவள். தாய் தந்தைக்கு ஒரே பெண். ஆனால், வசந்தி அதற்கு எதிர்மாறு. தாய் தந்தையர் யார் என்று அறியாது. அனாதை விடுதியில் உள்ள மற்றக் குழந்தைகளுடன் வளர்ந்து அங்குள்ள சிஸ்ரரையே அம்மா அப்பாவாக நினைப்பவள். வசந்திக்கு கிடைத்த புலமைப் பரிசிலேயே உயர்தரம் வரை படித்து பின் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி

பெற்று இப்போது 6 ம் ஆண்டு ஆசிரி யையாகக் கடமையாற்றுகிறள். மாதா மாதம் வருமானம் வருவதால் தொடர்ந்து அளுதை விடுதியில் இருப்பது என சிஸ்ரர் கூறியதையிட்டு இப்போ பெண்கள் விடுதியில் தங்கி வேலேக்கு போய் வருகிறள்.

மறுநாள் காலே தரகர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவேலேயை அறிந்த வர புறப்பட்டு சிசிலியா பெண்கள் பாடசாலேக்குச் சென்றூர். அங்கு அவர் வசந்தியைப் பற்றிக் கேட்டதும் சக ஆசிரியர் முதல் மாணவிகள் வரை அவளேப் புகழ்ந்தே கூறினர். தரகரும் அவளேப் பற்றி அடிமுதல் நுனிவரை ஆராய்ந்து அறிந்து கொண்டு, பார்வதி அம்மா விடம் சென்றூர். பார்வதியம்மா கொடுத்தவடையையும் சாப்பிட்டு தேனீரையும் அருந்திக் கொண்டு, தான் வசந்தி பற்றி அறிந்து திரட்டி வந்த செய்திகளேக்கூறத்தொ டங் கிளூர். அவர் கூறும் வரை கேட்டுக் கொண்டிருந்த பார்வதி யம்மா அவள் அளுதையா என்று இழுத்துவிட்டு, அதுவும் பறவாயில்லே அப்படி என்றல் தான் குடும்பத்து டன் ஒத்து இருப்பாள் என்று நினேத்து விட்டு சரி மேற்கொண்டு தான் கவனிக்கிறேன் என கூறி அவரிற்கு சேர வேண்டிய தரகர் பீசையும் அனுப்பிளுர். தரகர் சென்ற சிறிது நேரத்தில் ராஜா வீட்டிற்கு திரும்பி ளுன். மகளேக் கண்ட பார்வதி முகம் எல்லாம் சிரிப்பாக மகளே வரவேற்று முகம், கை,கால் கழுவி வா உனக்கு தேனீர் தருகிறேன் என்று கூறிஞர். தாயின் இந்நிலே கண்ட மகன் என்ன அம்மா இன்று ஒரே சந்தோஷமாக இருக்கிறீ போறுள்ளது என்று நினேத்த வண்ணம் பாத்ருமிலுள் சென்று முகம் கை கால் அலம்பிக் கொண்டு வந்து வரவேற்பறையில் தொலேக்காட்சியை போட்டு விட்டு அமர்ந்து கொண்டான். ராஜாவிற்கு வடையும் தேனீரும் கொண்டு வந்து கொடுத்து விட்டு ராஜா அதனே மெது வாக அருந்தத் தொடங்கியதும் பார் வதி மகனேப் பார்த்துக் கொண்டே மெதுவாக விஷயத்திற்கு வந்தார். இன்று தரகர் வைத்தியநாதன் வந்து போனவர் என்றூர். ராஜா, அது தான் உங்களுக்கு முகம் இவ்வளவு சந்தோஷமாக உள்ளது போல. தரகர் என்ன சொன்னவர் என்றுன். மகனே இப்படிக் கேட்டதும் பார்வதி ஒரு கணமும் தாமதியாது தரகர் சொன்ன விடயங்களேக் கூறத் தொடங்கிஞர்.

பெண்ணின் பெயர் வசந்தி. இவள் பெண்கள் விடுதியில் தங்கித் தான் வேலேக்கு போய் வருகிறுளாம். சிசிலியா பெண்கள் மாகாவித்தியால யத்தில் 6 ம் ஆண்டு ஆசிரியையாம், சிறு வயது முதல் சிஸ்ரர் மாருடன் வளர்ந்தவளாம் எனக் கூறிவிட்டு மகனின் முகத்தில் ஏதும் மாற்றம் தெரிகிறதா என்று பார்த்தார். ஏது மாற்றம் இல்லே என்றதும் அவள் அளுதை என்றூலும் பரவாயில்லே எங்களிடம் பரம்பரை பரம்பரையாக சொத்து உள்ளது. ஆகவே சீதனம் தேவையில்லே இவளிற்கு யாரும் இல்லே என்றும் யோசிக்கத் தேவை யில்லே. அப்படி என்றுள் தான் குடும்பத்துடன் ஒத்துப்போவாள் என்று அம்மா கூறியதும் என்னமோ அம்மா உங்க ளிற்கு பிடித்தால் சரிதான் என்று கூறிவிட்டு ராஜா எழுந்து தொலேக் காட் சியை அணேத்துவிட்டு அறைக்கு சென்று விட்டான். ஆஸ்பத்திரியால் வந்து களேத்து போயிருப்பான் அது தான் நேரத்துடன் அறைக்கு சென்று விட்டான் என்று நினேத்துக் கொண்ட பார்வதி லேட் சுவீச்சை போட எழுந்து சென்றூர்.

மாற்று உடையில் திரும்பி வந்த ராஜா அம்மா நான் சங்கரிடம் போய்விட்டு வருகிறேன் எனக் கூறிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறி அதை உதைத்து வேகமாக்கிக் கொண்டு சங்கரின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். சங்கர் இஞ்சினியராக அவுஸ்ரேலியாவில் வேலை செய்கிறவன். இப்போது 2 மாத விடுதியில் தாய்நாடு திரும்பியுள்ளான். சங்கரும் ராஜா சிறு வயதில் ஒன்றாக படித்தவர்கள். பின் இவன் டாக்டராகவும், சங்கர் இஞ்சினியராகவும் படித்து வந்தாலும் இருவரும் ஒன்றாக சேர்ந்தால் இருவருக்குள்ளும் ஒரு ஒளிவு மறைவு இன்றி பேசி முடித்து விடுவார்கள். சங்கரின் வீட்டின் முன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றதும், சங்கரின் தம்பி குமார் அண்ணா உங்களைத்தேடி ராஜா அண்ணா வந்துள்ளார் என்று கூறிக்கொண்டே கையில் இருந்த கிரிக்கட் மட்டையை சுவரில் ஓரமாக சாத்திவிட்டு உள்ளே சென்றான். அறையிலிருந்து வெளியில் எட்டிப் பார்த்த சங்கர் ராஜாவைக் கண்டதும் வெளியில் வந்து கை குலுக்கி என்னடா நான் வந்ததும் வந்து பார்த்தனீ அதன் பின் ஆளையே காணவில்லை. இன்று திடீரென்று வந்து நிற்கிறாய் என்று கூறியபடியே அவனை அழைத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்றான்.

ராஜா தனக்கு கலியாணம் பேசியுள்ளது பற்றியும் அம்மா பெண்ணைப்பற்றி கூறியவற்றையும் கூறினான். சங்கரைப் பார்த்து நாளை நாங்கள் எப்படியும் ஆளைப்பார்த்து விட வேண்டும் என்றான். என்னடா அதற்கிடையில் வரப்போறவளைப் பார்க்க இவ்வளவு ஆசையா என்று பகிடி பண்ணினான். உனக்கு எனது அட்வான்ஸ் வாழ்த்துக்கள் என்று கூறி. நான் நாளை உன்னுடன் வர முடியாது. இன்று இரவு 8 மணியளவில் உன்னை வந்து சந்திக்க இருந்தனான். ஆனால் அதற்கிடையில் நீயே வந்து விட்டாய். எனக்கு பெண் பார்த்து வைத்திருப் பதாகவும், அவளை கோவிலில் பெண் பார்ப்பதற்காக என்னை அங்கு வரும் படி பெரியம்மா கடிதம் போட்டிருக்கிறா. அதற்கு உன்னையுமழைத்துப் போக இருந்தனான். ராஜா உடனே கேட்டான் கலியாணம் முடிந்த பின் விட்டு விட்டு போவாயா?அல்லது கூட்டி போகிறாயா? என்று என்னுடன் கூட்டித்தான் போகிறேன். பார்த்தாயா இருவரினதும் நட்பின் அமைப்பையும், உனக்கும் எனக்கும் எப்படி ஒன்றாக திருமணம் அமைகிறது. சங்கர் ராஜாவை பார்த்து நீ நாளை பெண்ணைப் பார்க்க வேண்டும் அவ்வளவு தானே. அதை குமாரிடம் கூறினால் அவனே உனக்கு வருங்கால மனைவியை காட்டுவான். நீ நாளைக்கு ஆஸ்பத்திரிக்கு செல்லும் போது இங்கு வந்து குமாரை உன்னுடன் ஏற்றி போ என்றான். குமாருக்கு அவளைத் தெரியுமா என்றான் ராஜா. உடனே சங்கர் குமாரை கூப்பிட்டு சிசிலியாவில் 6 ம் ஆண்டு படிப்பிக்கும் ரீச்சரை உனக்கு தெரியுமா என்றான். அவளுடைய பெயரைச் சொல்லுங்க பார்ப்பம். அவவின் பெயர் வசந்தி. ஓ தெரியுமே நல்ல வடிவான ரீச்சரே அவ, உங்களுக்கு ஏன் அவ தேவை என்றான்.

தொடரும்

ஈழத்தமிழருக்குத் தமிழகப் பாடசாலைகளில் சேர்ந்து படிக்க இனி இடம் ஒதுக்கப்பட மாட்டாது என தமிழ்நாடு கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

# SEMINAR

International Federation of Tamils

# Towards a Just Peace

Whole Day Seminar on 15 th February 1992
School or Oriental and AfricanStudies, University of London

London Seminar calls upon Sri Lanka and the Liberation Tigers to express their willingness to accept mediation and enter into negotiations for an associative structure within which the Tamil people and the Sinhala people may live in peace and freedom.

Around 160 persons participated in the wholeday London Seminar convened by the Internation Federation of Tamils in association with the Bolton Tamil Association, the Essex and London Eelam Tamil Association, the federation of Tamil Associations of the United Kingdom, the International Tamil Foundation, the London Tamil Forum, the Tamil Refugee Action Group, the Tamil Refugee Housing Association and the Walthamstow Tamil Sangam on 15 January at the School of Oriental and African Studies, University of London. Eighteen papers, several prepared by the Working Group of International Federation of Tamils, were discussed. Dr.N.Satchithananadan, General Secretary of the Federation of Tamil Associations of the United Kingdom delivered the key note address. The seminar examined the issues that confronted the struggle of the people of Tamil Eelam and the steps to be taken to secure a just peace in the island of Sri Lanka.

The Seminar concluded that the subjective political consciousness of the Tamils taken together with their objective conditionds of existence in Tamil Eelam, including in particular their relationship to a defined historical territory, constituted them a 'people'. It was felt that as a 'people' they were entitled to be free of domination by any other people and that they were entitled, to assert their right to self determination. The Seminar took the view that a people are entitled, in law and in justice, to resort an armed struggle to free themselves from a continuing and oppressive domination by another people and recognised that the armed struggle of the people of Tamil Eelam led by the Liberation Tigers of Tamil Eelam was both lawful and just. In the context of the emergence, today, of many long subjugated peoples into a new world order of free and equal nations,the Seminar called upon the two parties to the conflict,the Sri Lankan Government and the Liberation Tigers of Tamil Eelam.

1. to express their willingness to accept mediation in the conflict between them and to agree upon a mutually acceptable neutral mediator.

2. to express their willingness to commence negotiations with a view to entering into an internationally guaranteed accord to establish an associative structure within which the Sinhala people and the Tamil people may live in peace and in freedam.

## Full Text of Seminar Conclusion

This London Seminar convened by the International Federation of Tamils in association with the Bolton Tamil Association, The Essex and London Eelam Tamil Association,

people and the Tamil people may live in peace and in freedam.

## Full Text of Seminar Conclusion

This London Seminar convened by the International Federation of Tamils in association with the Bolton Tamil Association, The Essex and London Eelam Tamil Association, the Federation of Tamil Associations of the United Kingdom, the International Tamil Foundation, the London Tamil Forum, the Tamil Refugee Action Group, the Tamil Refugee Housing Association and the Walthamstow Tamil Sangam.

Recognising that a people have the right to be free of domination by another people;

Recognising that the right of self determination of a people is a peremptory norm of the law of nations;

Recognising that the subjective political consciousness of the Tamil taken together with their objective conditions of existence in Tamil Eelam, including in particular their relationship to a defined historical territory, constitutes them a 'people';

Recognising that the people of Tamil Eelam have the right to self determination and the right of freely choose their political status, including the right to freely associate with or disassociate from,other people;

Recognising that a people are entitled, in law and in justice, to resort an armed struggle to free themselves from a continuing and oppressive domination by another people and recognising that the armed struggle of the people of Tamil Eelam led by the Liberation Tigers of Tamil Eelam is lawful and just;

Recognising the desire of the people of Tamil Eelam for peace and believing that justice and peace are inseparable;

Recognising that a people are entitled, in law and in justice, to resort an armed struggle to free themselves from a continuing and oppressive domination by another people and recognising that the armed struggle of the people of Tamil Eelam led by the Liberation Tigers of Tamil Eelam is lawful and just;

Recognising the desire of the people of Tamil Eelam for peace and believing that justice and peace are inseparable;

Recognising the emergence,today,of many long subjugated peoples into a new world order of free and equal nations; and

Being determined to respond to the challenge of history in forging a peaceful for the Tamil and Sinhala peoples in the island of Sri Lanka

Calls upon the two parties to the conflict, the Sri Lankan Government and the Liberation Tigers of Tamil Eelam

1. 1. to express their willingness to accept mediation in the conflict between them and to agree upon a mutually acceptable neutral mediator.

2. to express their willingness to commence negotiations with a view to entering into an internationally guaranteed accord to establish an associative structure within which the Sinhala people and the Tamil people may live in peace and in freedam.



# பூமி தாங்குமா?

கட்டுரை — அ. ஜே. ஞானேந்திரன் —

" போகிற போக்கைப் பார்த்தால், இந்த நூற்றுண்டின் முடிவில் இன்றைய ஜனத்தொகை இரட்டிப்பாகிவிடும்" என்று எச்சரிக்கை விடுக்கிறது ஒரு தனிப் பட்ட ஜனத்தொகை ஆய்வுக்குழு! வாஷிங்டனில் இயங்கி வரும் இக்குழுவின் உப தலைவர் தன் அறிக்கையில் " ஐ. நா.சபையின் கணிப்பின்படி இன்றைய ஜனத் தொகை 5.3 பில்லியன் என்றும், இத்தொகை 1991க்கு முன்பு 14 பில்லியனை எட்டிப்பிடித்துவிடும்" என்று ஒரு அதிர்ச்சிகரமான தகவலைத் தருகிருர். " இதே ஜனத்தொகை வளர்ச்சி நீடிக்குமானுல், 21 ம் நூற்றுண்டின் முடிவில் ஜனத்தொ கை 27 பில்லியனுக இருக்கும் " என்று மேலும் தெரிவிக்கிருர் இந்த அதிகாரி! 14 பில்லியனை, ஒன்பதோ அல்லது பத்தாகவோ குறைப்பதற்கு குறைந்தபட்சம் 75 வீதமான ஜோடிகள் கருத்தடை சாதனங்களை உபயோ கித்தால்தான் சாத்தியப்படுமாம். ஆனுல் அதே சமயம் இவ்வளவு தொகையான கருத்தடை சாதனங்கள் 20ம் நூற்றுண்டின் முடிவிற்குள் தாயாராக இருந்தால் தான் 21ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் குடும்பத்திற்கு இரண்டு பிள்ளைகள், அதாவது " நாம் இருவர் நமக்கு இருவர்" என்ற கட்டுப்பாடான நிலைமை உரு வாக வாய்ப்புண்டு என்று இந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

இந்த ஏற்பாட்டுக்கான செலவு எவ்வளவாக இருக்கும்? இப்படியான ஒரு முயற்சியை இப்பொழுது தொட்டே மேற்கொள்ள ஆரம்பித்தால் 2000 ஆண்டாகும் வ்ரை வருடத்திற்கு 10.5 பில்லியன் அமெரிக்க டாலர் வீதம் பணம் தேவைப்படும். குடும்பக்கட்டுப்பாட்டில் கூடிய கவனமெடுக்கும் அபிவிருத்தி யடைந்த நாடுகள் தற்போது ஆண்டொன்றுக்கு 3.2 பில்லியன் டாலர்கள் செல விட்டு வருகின்றன. இந்த முயற்சியை நடைப்படுத்த வளர்ந்து வரும்(தொழில் ரீதியாக) அபிவிருத்தியடைந்த நாடுகள் தங்கள் வருடாந்த அன்பளிப்புத் தொகையை அதிகரிக்க வேண்டும். அதாவது இக்குழுவின் கணிப்பின்படி 4 பில்லியன் டாலர்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அமெரிக்க அரசிடமிருந்து 3.2 பில்லியன் டாலரும், உலகளாவிய தனிப்பட்ட சமூகசேவை யாளர்களிடமிருந்து 500 கோடி டாலரும், கருத்தடைச் சாதனை பாவனையாளர் களிடமிருந்து ஒரு பில்லியன் டாலரையும் இக்கணிப்பின் முடிவில் இக்குழு எதிர்பார்க்கின்றது. இவர்களுடைய தகவல்களின் பிரகாரம் 29 நாடுகள் குடும்பக் கட்டுப்பாட்டில் ஏறத்தாழ நூற்றுக்கு தொண்ணுறு வீதம் வெற்றியைக் கண்டுள்ளனவாம். செக்கோசெலவேக்கியா, பிரிட்டன்,

பெல்ஜியம், பின்லாந்து, பிரான்ஸ், மே.ஜேர்மனி, இத்தாலி, சுவீடன், தாய்வான், பல்கேரியா, தெ.கொரியா, அமெரிக்கா, சிங்கப்பூர், கனடா, ஹங்கேரி, ஹொங்ஹொங், நெதர்லாந்து, ஆஸ்திரியா, நோர்வே, சுவிட்சிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, போர்த்துக்கல், ஜப்பான், டென்மார்க், ஸ்பெயின், யூகோஸ்லேவியா, கி.ஜேர்மனி, கிரீஸ் ஆகிய 29 நாடுகளே குடும்பக்கட்டுப்பாட்டு விடயத்தில் வெகு முன்னேற்றத்தைக் கண்டுள்ள உலக நாடுகளாகும்.

இன்னும் 12 நாடுகள் இந்த விடயத்தில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றன என்று மேலும் தெரிவிக்கிறது இவர்களது அறிக்கை. இந்தப் பன்னிரண்டு நாடுகளில் எங்கள் தாய் நாடும் ஒன்று என்பதுதான் இங்கே குறிப்பிடத்தக்க அம்சம். போலந்து, ஆர்ஜென்டீனா, சீனா, இஸ்ரவேல், உருகுவே, கோஸ்டாறிக்கா, தாய்லாந்து, சிலி, பிரேசில், கொலம்பியா, துருக்கி, சிறீலங்கா - இவைதான் ஏனைய 12 நாடுகள். ஆனால் 18 நாடுகள் இந்தவிடயத்தில் மோசம் என்றும், 45 நாடுகள் படுமோசம் தீர அக்கறையே இல்லை என்றும் தெரிவிக்கிறார்கள்.

உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றான 'குவைத்' மோசம் என்ற பட்டியலிலும், 'படுமோசம்' என்ற பட்டியலில் பெரும்பணக்கார எண்ணெய் வள அரபு நாடான சவுதி அரேபியாவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகெங்குமுள்ள பலநாடுகளின் அரசுகள், தனிப்பட்ட நிறுவனங்கள் கூடிய சிரத்தையெடுத்தால் ( இப்பொழுது தொட்டே ) ஒருவேளை இன்னும் 20 ஆண்டுகள் கழித்து நாம் எதிர்பார்க்கும் ஜனத்தொகைக் கட்டுப்பாடு ஆரம்பமாகலாம் என்று கூறும் இந்த அதிகாரி ஒரு அபிவிருத்தியடைந்த நாட்டில் இக்கட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு செயற்பட்டால் ஒரு ஜோடிக்கு 16 டாலர்கள் வரை செலவிட வேண்டும் என்கிறார்.

## பி. பி. சி. தமிழோசை

பி. பி சி. தமிழோசை வாரத்தில் ஏழு நாட்களும் ஒலிபரப்பாகும். தமிழோசை நேயர்களின் நீண்ட நாள் ஆசை மார்ச் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து எல்லா நாட்களும் ஒலி பரப்பாகி நிறைவேற்றப்பட்டுள்ளது.. செய்தியரங்கம், அனைவர்க்கும் அறிவியல், சித்திரம், கதம்பமாலை, கேள்வி பதில், நேயர் கருத்த ரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வரும் நிலையில் புதிதாக மலர்ந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகளில் செய்தியரங்கத்தைத் தொடர்ந்து நாடகம், இசை, விளையாட்டரங்கம் மற்றும் கலாச்சாரத்துறை அம்சங்கள் இடம்பெறுகின்றன.

# இசை மாலை

## நாத வித்யாலயா

## நர்த்தனகலாலயா

– வெற்றிக் குமரன் –




இலண்டனில் பல பாகங்களிலும் உள்ள மண்டபங்களிலும் பலப்பல இசை, நடன நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் நாதவித்யாலயா, நர்த்தனகலாலயா இணைந்து அளித்த நிகழ்ச்சி ஒன்றும் கடந்த 7.3.92 அன்று வெம்பிளியில் உள்ள பிறென்ற் நகர மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினால் சேகரிக்கப்பட்ட நிதியை நாதவித்தியாலயாவின் அதிபர் ஸ்ரீமதி கலைவாணி இந்திரகுமார் St. Mary's Hospital, Paddington அதிகாரிகளுக்கு அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் முதலில் இடம் பெற்ற பரிசளிப்பு வைபவம் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு முக்கிய அம்சம். ஏனெனில் நாதவித்தியாலயாவின் வயதில் மிகவும் சிறிய, ஆனால் வயலின் அறிவில் பெரியவர்கள் எனக்காட்டிய மாணவிகள் பலர் தங்கப்பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றமை எமக்கு ஆச்சரியத்தை ஊட்டிய அதேவேளை இவர்கள் இலகுவில் இத்தகைய பரிசில்களைப் பெறவில்லை என்பதையும் அடுத்து வந்த அறிவிப்பாளரின் அறிவிப்பில் இருந்து தெரிந்து கொண்டவை. இந்தியாவில் இருந்து வந்த இரு பிரபல்யமிக்க இரு ஆசிரியர்களையும், இலண்டனில் முன்னணி வகிக்கும் ஓர் ஆசிரியையும் கொண்ட நடுவர்கள் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இவர்கள். இந்த மாணவிகளின் திறமையின் பின்னாலிருப்பவர் நாதவித்யாலயாவின் அதிபரும், குருவுமான ஸ்ரீமதி கலைவாணி இந்திரகுமார். இவர் இக்கல்லூரியை 1986ம் ஆண்டு ஆரம்பித்து வெகு விரைவில் தனது மாணவிகளைத் தம்மைப்போலவே பிரபல்யம் அடைய வைப்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.


-28

வயலின் இசையும் இடை வேளையின் பின் வீணை இசையும் நம் செவிக்கெல்லாம் விருந்தளிக்க அடுத்து வந்ததோர் நாட்டிய நாடகம். வள்ளி திருமணம் என்ற இந்த நாட்டிய நாடகத்தை இலண்டனில் பரத நாட்டியத்திற்கே வழிகாட்டியாகத் திகழும் நர்த்தன கலாலயாவின் அதிபரும் குருவுமான ஸ்ரீமதி பத்மினி குணசீலன் தயாரித்தளித்தார். இவரது இத்தயாரிப்பின் மூலம் நம்மையெலாம் ஒருகணம் கானகத்திற்கும், பழனிமலைக்கும், தினைப்புனத்திற்கும் அழைத்துச் சென்று விட்டார் என்று தான் சொல்ல வேண்டும். இது போல ஸ்ரீமதி பத்மினி குணசீலனினுல் பல நாட்டிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன.

நர்த்தன கலாலயாவின் மாணவிகள் காட்டிய அபிநயம், முகபாவம் அற்புதம். இந்நிகழ்ச்சிகளில் மேலும் ஒருபடி மேலே போனுல் இங்கே இந் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் மெருகூட்டியவர்களான, தனது கம்பீர கானக்குரலால் இசைமழை பொழிந்த ஸ்ரீமதி அம்பிகா தாமோதரம் ஒரு புறமும், இலண்டன் மேடைகளில் எல்லாம் மிருதங்கச் சக்கரவர்த்தியாகச் சிறந்த நாதமணி முத்து சிவராஜா இன்னெரு புறமும், இவர்களுக்கிடையில் மோர்ஷிங் இசையால் இசைக்கு வளமூட்டும் கந்தையா சிதம்பரநாதனும் இருக்கிருர்கள். இவர்களையும் நாம் பாராட்டாமல் விட முடியாது.

இவை எல்லாம் திருஷ்டி படுவதுபோல நிகழ்ச்சி அமைப்பில் இருந்த ஒழுங்கீனமும், நேரகாலத் தாமதமும் பார்வையாளர்களைச் சோதித்துவிட்டது. அடுத்து நாடறிந்த மேற்குறிப்பிட்ட கலைஞர்களின் பெயர்களைத் திரும்பத் திரும்ப அறிவிப்பாளர்கள் விளம்பரப்படுத்துவது போன்று அறிவித்தமை இக்கலைஞர்கள் அண்மையில் தான் வந்தனரோ என ஐயுறவைத்துவிட்டது.

இறுதியாக நம் செவிகளுக்கெட்டியவை திறமையான இவ்விருபாடசாலைகளின் பெயர்களை மட்டும் ஏன் தமிழ்ப் பெயர்களாக வைக்காமல் சிங்களப் பெயர் போன்று வித்தியாலய என்றுள்ளன? இது பார்வையாளர்களின் கருத்து.



# இசைக்குயில் சுஜாயா சந்திரன்

– விமர்சனம் – — வெற்றிக் குமரன் —

"ஏழிசையாய், இசைப்பயனாய்...." இறைவன் விளங்குவதாகச் சுந்தரர் பாடுகிறார். எனவே இசைவழியாகவும் இறைவனை வழிபடலாம் என்பது அவர் காட்டிய வழி. அமுதத்தை அருந்த முடியா விட்டாலும், சங்கீதம் அத்தகைய ஆன்மாவைத் தொடும்-சாந்தி, யோகம், தியாகம், போகம் போன்ற சம்பந்துக்களைக் கொடுக்க வல்லது. அண்மையில் (18.4.92) இலண்டன் பாரதீய வித்யாபவன் மண்டபத்தில் குமாரி சுஜாயா சந்திர னின் சங்கீத அரங்கேற்றம் நடை பெற்றது.

சங்கீத நுணுக்கங்களைப் புரிந்து பாடும் வித்வத்துவம் பயிற்சியினால் மட்டும் வந்துவிடாது. இதனை பன்னிரண்டு வயதே நிரம்பிய குமாரி சுஜாயா சந்திரன் அரங்கேற்றத்தில் அமைந்த இராகம், தாளம் பல்லவி அவரது திறமையை மட்டுமல்லாது அவரது குருவான ஸ்ரீமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் குருத்துவத்தை வெளிப்படுத்தியது. குமாரி சுஜாயா பாடல்களின் பொருளறிந்து தாமும் அனுபவித்து கேட்போரையும் மெய் மறக்கச் செய்துவிட்டார் என்பதை பார்வையாளர்களின் கரஒலி மூலம் காணக்கூடியதாயிருந்தது.. இடைவேளையின் பின்னர் இடம் பெற்ற "முருகனே செந்தில் முதல்வனே", பாரதியார்பாடல், "தமிழன் என்றொரு இனம் உண்டு" போன்ற பாடல்களின் மூலம் சாஸ்திரிய சங்கீதம் மட்டுமல்ல மெல்லிசையிலுள்ள வல்லமையையும் காட்டிவிட்டார். அத்துடன் இவரது அரங்கேற்றத்தின் போது பிரபல்யமிக்க வயலின் வித்வான் டாக்டர் லஷ்மி ஜெயனின் வயலின் இசைக்கும், நாதமணி முத்து சிவராஜாவின் மிருதங்கத்திற்கும், ரவிசங்கரின் கடத்திற்கும் மற்றும் காயத்திரியின் தம்பூராவிற்கும் ஈடு கொடுத்துத் தனது திறமையை வெளிப்படுத்திய சுஜாயா தனது குருவான ஸ்ரீமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் மெய்யான ஒரு இலண்டன் இசை வாரிசு என்பதில் முத்திரை பதித்து விட்டார். இறைவன் அளித்த குரல் இனிமை, சங்கீதத்தில் உள்ள ஈடுபாடு, கடின உழைப்பு ஆகியவை கர்நாடக இசையையும், தமிழிசைப் பாடல்களையும் கனிச்சாறாக ரசிகர்களுக்கு சுஜாயா வருங்காலத்தில் கொடுப்பார் என்பதில் ஐயம் இல்லை.

## ஓர் கலைஞன் நோக்கில்

# கலாட்டா கல்யாணம்

- இளைய ஞாயிறு -

தமிழகத்தைப் போலன்றி ஈழவர் மத்தியில் என்றுமே நகைச்சுவைக்குப் பஞ்சந்தான். தொடர்ந்தேர்ச்சியான அடக்குமுறைகளும் அடிமை வாழ்வும் ஈழத்தமிழர் மத்தியில் சுதந்திரமான நகைச் சுவை எண்ணங்களுக்கு கடிவாளமாக, தடைக்கல்லாக இருந்தது எனலாம். சக்கடத்தார், அண்ணை ரைட், டிங்கிரி சிவகுரு போன்ற நாடகங்கள் ஈழத்தில் நகைச்சுவை இன்னமும் இறக்கவில்லை என்பதற்கு ஒர எடுத்துக்காட்டாகும்.

அண்மையில் வடக்கு லண்டனில் உள்ள எட்மன்ரனில் நடைபெற்ற கலாட்டா கல்யாணம் என்ற நாடகத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். பலவித வேலை நெருக்கடிகளுக்கு மத்தியில் சிறிது நேரமாவது எம்மை மறந்து சிரித்து மகிழலாம் என்ற நப்பாசை தான். மாஸ்டர் மனோகரனின் அயராத முயற்சியில் பல கலைஞர்கள் நாடகத்திற்கு உயிர் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள்.

சிறப்பம்சங்களாக- நாடகாசிரியரின் பெரும் முயற்சியாலோ அன்றித் தங்களது இயல்பான நடிப்புத்திறனாலோ கலைஞர்கள் எம்மைத் தம்பால் வெகு நேரம் வைத்திருந்தனர் என்பது பாராட்டத்தக்கது.

நினைந்து நினைந்து சிரிக்கக்கூடிய பல நகைச்சுவைக் கட்டங்களைக் கலைஞர்கள் நிறைவுடன் தந்திருந்தார்கள்.

அரைநூறு வயதிற்கு மேற்பட்டிருந்தும் சில கலைஞர்கள் நாடக வசனங்களை இயல்பாகவே அள்ளி வீசியது சபையைக் கலகலக்க வைத்தது.

கவனிக்க வேண்டியவை -

இந்நாடகத்திற்கான முன்னறிவித்தல் பல காலங்களுக்கு முன்னரே கொடுக்கப்பட்டிருந்தும் பெரும்பாலான கலைஞர்கள் தங்களுக்குரிய வசனங்களை மனனம் செய்யாமல் திருதிருவென விளித்து நின்றதும் அங்குமிங்கும் அமைதியாய் நடந்து திரிந்ததும் சலிப்பை ஏற்படுத்தியது. லண் டனில் நேரம் ஒதுக்கி இப்படியொரு நாடகம் பழகுவது கடினந்தான். ஆனால் காசு கொடுத்து நாம் பார்க்கும் நிகழ்ச்சி சற்றுத்தரமாக இருக்க வேண்டும் என நினைப்பது தவறல்லவே.

தமிழகத்திரைப்படங்களையும் மிஞ்சும் வகையில் விரசமான வசனங்களைக் கலைஞர்கள் அள்ளி வீசியமை தீரணிக்க முடியாமலும்

கலைஞர்பால் உள்ள அபிமானத்தைக் குறைக்கக்கூடிய முறை யிலும்

அமைந்திருந்தது. குறிப்பாகத் தம்பதியர் சண்டை பிடிக்கும் போது முருங் கைக்காய், இரவுக்கு என்ன செய்வது இத்தியாதி வசனங்கள் நாடகாசிரியரின் சிந்தனைக்கு ஆரோக்கியமான அனுபவ அறிவு தேவை என்பதைக் காட்டியது. நகைச்சுவைக்குப் பஞ்சமென்றுல் விரசமாக வசனமெழுதித்தான் ரசிகர்களைக் கவரவேண்டுமென்பதல்ல.

அடுத்துப் பேசும் தமிழில் இருந்து இடையிடையே நாடகத் தமிழுக்கு பேச்சை மாற்றியமை நாடகத்தோடு ஒன்றியிருந்த எம்மைச் சற்று இடையிடையே விலக வைத்து விட்டது.

சாதி வேறுபாட்டை நீக்கும் சமூக நாடகம் போன்ற எண்ணத்தில் உருவான இக்கதையின் ஆரம்பமுதல் பேசப்பட்ட வசனங்கள் தாழ்ந்த சாதியினரின் உள்ளத்தை ஈட்டிகளாகத் தைத்ததை வசனகர்த்தா ஏன்தான் உணரவில்லை. சாதி வேறுபாடு சிறிது சிறிதாகக் குறைகிறதேயொழிய முற்முக இன்னமும் அழியவில்லை. இங்கு வந்ததால் அந்தப் பழைய ஞாபகங்களை மறந்து மகிழ்வோடு வாழ்ந்த பலருக்கு அன்றைய நாடகம் பழைய காழ்ப்புணர்வுகளை ஞாபகப்படுத்தியதேயொழிய வேறொன்றில்லை. நாடகம் முடிந்து செல்லும் போது ரசிகர்களின் விமர்சனங்களில் இருந்து தான் இவ்வசனங்கள் அவர்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பது புலனுயிற்று.

இறுதியாக

கொடுக்கும் பாத்திரத்தைத் திறம்பட நடிக்கும் திறமை மிக்க கலைஞர்கள் கைவசமுள்ள வேளையில் நாடக ஆசிரியர் தனது கற்பனை வளத்தை ஆரோக்கியமாக விருத்தி செய்தால் அது கடல் கடந்து வாழும் பல்லாயிரக் கணக்கான தமிழ் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக அமையும். இவை மாஸ்டர் மனேகரனின் இறுதிப்படிகளல்ல. ஆரம்பப்படிகளே. இவ்விமர்சனம் ஆகா ஓகோ என்று அந்நாடகத்தைப் புகழ்கின்றவர் மத்தியில் வித்தியாசமானதே.

ஆக்கபூர்வமான முறையில் இவ்விமர்சனத்தைக் கருத்தில் கொண்டு சத்தான கருத்துள்ள முத்தான நாடகங்கள் வித்தாகும் நாளை விரைவோடு எதிர்பார்ப்போம்.

---

**வடபகுதியில் பிறக்கும் குழந்தைகள் நிறைகுறைந்தே பிறக்கின்றன.**

***வைத்திய வசதிகளையும் போதிய மருந்து வகைகளையும் வழங்காமல் எவரையும் முக்கியமாகப் பொதுமக்களை உயிரிழக்கச் செய்வது செஞ்சிலுவைச் சங்கத்தின் நடைமுறைகளுக்கு எதிரானதாகும் என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் மாவட்ட கிளைத்தலைவர் டாக்டர் செ. சு. நச்சினார்க்கினியன் தெரிவித்தார். நிறை குறைந்த குழந்தைகள் உடல் வளர்ச்சி மட்டுமல்லாமல் உளவளர்ச்சி மூளை வளர்ச்சி குன்றியவர்களாகவும் எதிர்காலத்தில் முழு வளர்ச்சியற்ற சமூகத்தினராகத் திகழும் அபாயம் ஏற்படும் என்றும் தெரிவித்தார்.***

32

# அலை ஓசை


தமிழ் ஆங்கில விஞ்ஞான கலாச்சாரச் சஞ்சிகை
TAMIL ENGLISH SCIENCE & CULTURAL MAGAZINE
அலை 7 ஓசை 2 பங்குனி - வைகாசி 1992 Mar-May 1992


## சமாதான முயற்சிகளும் சறுக்கும் காரணங்களும்

இலங்கையில் எங்கு பார்த்தாலும் சமாதான முயற்சிகள் பற்றிய பேச்சே பலமாக அடிபடுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அரசியல் குழுக்களின் எல்லா மட்டங்களிலும் இம்முயற்சி துரிதமாக நடைபெறுகின்றது. தான் தான் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற நப்பாசை ஒவ்வொரு குழுக்களுக்கும் இல்லாமலில்லை. ஆனால் இதன் பக்க அல்லது எதிர்கால விளைவுகள் சிங்கள மக்களிடம் இருந்து தம்மை அன்னியப்படுத்தி விடுமோ என்பது அவர்களது பயம். சிங்கள மக்கள் இதை மறந்தாலும் இதர கட்சிகள் தாம் பதவிக்கு வருவதற்காக வடகிழக்கைத் தமிழருக்கு விற்று விட்டார்கள் என்று பிரச்சாரம் செய்வார்கள் என்பது வெள்ளிடை மலை. இதன் காரணமாக தாமும் முயற்சிக்காது மற்றவர்களையும் இம்முயற்சியைச் செய்யவிடாது இழுத்தடிக்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் தேசபக்தியும் நாட்டு நலனும் மிக்க தலைவர்கள் சிங்கள மக்களிடையே இல்லாமை தமிழ் மக்களின் துரதிஸ்டமே. அது மட்டுமன்றி இன்றைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் படும் அவலத்தை எண்ணியாவது இதர தமிழ்க்குழுக்கள் தியாக சிந்தையுடன்

கசப்புணர்வுகளை நீக்கி ஈழவர் நலனில் அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகும். போதிய தீர்க்கதரிசனம் இருந்திருப்பின் பெரும்பான்மை கட்சிகள் வடகிழக்கு இணைப்பை எதிர்ப்பார்கள் என்பதும் இன்று அதைக்காரணங்காட்டித் தீர்வு முயற்சியில் இருந்து ஒதுங்குகிறோம் என்ற நிகழ்வுகளும் நடந்திருக்காது. மலையகத்தலைவர் திரு தொண்டமானின் முயற்சி கைகூடாவிடினும் அவரது முயற்சியின் பின்னர் பேச்சுவார்த்தைகளும் சமாதானம் பற்றிய கதைகளும் பலமாக அடிபடுவதை நாம் அறியாமலில்லை. பிக்குமாரின்வடபகுதி விஜயம் இதர அரசியல் கட்சிகளுக்கும் இனப்பிரச்சனை விடயத்தில் ஓர் முன்னெடுப்பை உணர்த்தியுள்ளதும் கவனிக்க வேண்டிய அம்சமாகும். யார் குற்றியாவது அரிசியானால் சரி என்ற நிலைமைக்கு ஈழவர் வந்துள்ள வேளையில் இவ்வரசியல் கட்சிகளின் முயற்சிகள் துரிதமுடன் பலனளிக்க வேண்டும் என்பதே எமது அவா. காலம் தான் பதிலளிக்க வேண்டிய நிலையில் நாமும் பொறுத்திருந்து பார்ப்போம்.


| | |
|---|---|
| ஆசிரியர்கள் | – பால ரவீந்திரன், க. ஜெயகுமார் |
| உதவி ஆசிரியர்கள் | – க. மேகநாதன் , சி. ந. ரகுராம் |
| ஆங்கிலம் | – டாக்டர் ச. மகேஸ்வரன் |
| விஞ்ஞான தொழில்நுட்பம் | – ப. நந்தகுமார் |
| நிருபர்கள் | – (அவுஸ்திரேலியா) வி. அரவிந்தன், |
| | (கனடா) க. கேதீஸ்வரன் . |
| | (டென்மார்க்) ஆர். கருணாகரன் |
| | (பிரான்ஸ்) க. கருணாநிதி |
| | (நோர்வே) கு. சிந்து |

வெளியீட்டாளர்கள் – வோல்தம் பொறெஸ்ட் தமிழ்ச் சங்கம்

ஆக்கங்கள், விளம்பரங்கள், விமர்சனங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

The Editor, "Alai Osai"

109, Philip Lane, Tottenham, London N15 4JR

# நம்பமுடியவில்லை

க.கோணேஸ்வரன் வவுனியா.

கட்டுநாயக்காவில் கதறியழ
கண்ணீரும் கம்பலையுமாய்
காட்டுவிநாயகர் நேர்த்தியுடன்
நாட்டைவிட்டு வெளியேறியதுடன்
ஈரேழு நாட்களுக்கொரு முறை உள்ளம் உருகியவாறு
உருண்டோடி வரும் உன் அன்புமடல்
உறவினர் வட்டத்திற்காய்
பட்டகடன் முழுவதுமே இட்டவட்டியுடன்
இமைப்பொழுதில் அனுப்பிடவே இராப்பகல் குளிர்பாராது
ஓவர்ரைம் செய்கின்றேன் என்றுரைத்தாய்
அன்று பெருமையுடன்
இன்றுடன் ஈரிரண்டு வருடங்கள் தான்
உருண்டோடி விட்டன
இலவுகாத்த கிளியாளும் நாம்
இருக்கைக்காய் சிற்றிசனும் பெற்று விட்டாயாம்
பின்வீட்டு சிவராசன் மகன் ரவிவர்மன் தான்
தகவல் தந்தான் தயான சிந்தையுடன்
ஆசைக்காய் காணவில்லை உன் அன்புமடல்
அத்தனைக்கும் அர்த்தம் தான் துலங்கவில்லை
உடலும் குலைந்து உருவமும் மாறிவிட்டாயாம்
உன்னெடுத்த மேல்நாட்டு உயிர் கொல்லியால்
உழைத்த பணமும் உருகிய விதம் புரிகிறது
உடன் பிறந்தவர் நமக்கு
சேமன் மகன் சின்னத்தம்பி சென்று தான் மூன்று வருடம்
ஊரிலோ உருப்படியான உயர்வீடு
ஏன் குடிகார குமாரசாமி மகன் சிவபாதம் கூட
குமர் இரண்டைக் கூப்பிட்டான் தலைமாற்றி
ஐயோ இழந்துவிட்டோம் மகனே செந்தில் குமரா

சீராட்டி வளர்த்த பாசங்கள் சித்திரவதைசெய்கின்றனநித்தமும்
நீடிக்கவேண்டாம் நின் சினத்து செம்மை நின்றுடனே
எம்மடல் கண்டவுடன் விரைந்து வா தாயகம்
தாயன்னை கதறுகிறாள் தலைவிரி கோலமாக
உன்கேவலம் கேட்டு நம்பமுடியவில்லை
என்மகன்தானா நீயென்று.

# இலண்டன் நிகழ்வுகள்

## பெண்கள் தின விழா

கடந்த மாதம் 11ம் திகதி சனிக்கிழமை வோல்தம் பொறெஸ்ட் தமிழ்ச்சங்க பெண்கள் அணியினர் தமது அகில உலகப் பெண்கள் தினத்தை மிகவும் விமரிசையாக லேயிற்றன் (Leyton ) அசெம்பிளி மண்டபத்தில் கொண்டாடினர்கள். பட்டிமன்றம், நடனம், உடை அலங்காரக் காட்சி போன்ற நிகழ்ச்சிகள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. அன்று காலை வோல்தம்ஸ்ரோ சந்தைப்பகுதியில் ஒரு சிறிய அளவிலான கடை ஒன்றையும் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்கள். மாலை மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் வோல்தம் பொறெஸ்ட் நகர கவுன்சிலர் மேயர் கான் அவர்களின் உரையுடன் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.




## மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

வோல்தம் பொறெஸ்ட் தமிழ்ச் சங்கத்தின் உதைபந்தாட்டக் குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களும், சங்க அங்கத்தவர்களும் இணைந்து நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணியளவில் LLOYD PARK இல் இடம்பெற்றது. ஒவ்வொரு பகுதியிலும் ஏழுபேர் கொண்ட ஆறு அணிகள் மிகவும் விறுவிறுப்பான முறையில் மோதிக்கொண்டனர். இதனை அடுத்து மாலை 7,30 மணியளவில் GREENLEAF ROAD இலுள்ள CHURCH மண்டபத்தில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில் வழங்கல் வைபவமும், அதனை அடுத்து விருந்துபசாரமும் இடம்பெற்றன. வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசல்களை தமிழ்ச்சங்கத்தின் பெண்களணிப் பொறுப்பாளர் திருமதி வேணி மகேஸ்வரன் அவர்கள் வழங்கினர்.



## நாடக விழா 92 (1) 92 (2)

தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் நாடகவிழா 92 (1) மே மாதம் 24ம் திகதி மாலை 6 .30 மணிக்கு MERTON HALL , KINGSTON ROAD, SOUTH WIMBLEDON ல் இடம்பெற உள்ளது. நாடகவிழா 92 (2) நாடகவிழா 1 இல் இடம் பெறாத சில புதிய நாடகங்களுடன் யூலை மாதம் 11ம் திகதி வோல்தம்ஸ் ரோவிலுள்ள LLOYD PARK THEATRE இல் இடம் பெற உள்ளது. நுழைவுச் சீட்டுக்கள் £ 3,00 .

## தமிழ் அகதி நிறுவனம்

தமிழ் அகதிகளின் நலனைக் கவனிக்க அண்மையில் மேலும் ஓர் தமிழ் அகதி நிலையம் ஒன்று எட்மன்ரனில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலக்கம் 256, FORE STREET EDMONTON , LONDON N18 என்னும் முகவரியில் இந்நிறுவனம் உள்ளது. இந் நிறுவனத்தில் பல்வேறு வகையான சேவைகள் வழங்கப்படுகின்றன. அவையாவன IMMIGRATION, WELFARE, ACCOMODATIONS & HOUSING, TRAING & EMPLOYMENT, EDUCATION, இது தவிர வாசிக சாலை ஒன்றும் இந் நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

## தமிழ் வைத்தியர்கள் சங்கத்தின் மன்னுர் அகதிகளுக்கான நிதி சேகரிப்பு விழா

நாட்டிய மஞ்சரி என்னும் நிகழ்ச்சி வெம்பிலி கோப்லண்ட் பாடசாலையில் கடந்த மாதம் 11ம் திகதி தமிழ் வைத்தியர்கள் சங்கத்தினுல் மன்னுர் அகதிகளுக்கு நிதி சேகரிக்குமுகமாக நடைபெற்றது. விழாவிற்கு மெருகூட்டும் வகையில் அமைந்த நடனத்தில் காவியத்தின் கலைவியரும் பெற்றிடாத பாவங்கள் அபிநயங்கள், பாதத்தின் அசைவுகள் மிரட்சி கலந்த பார்வை மொத்தத்தில் நாட்டியத்தின் அம்சங்கள் அத்தனையும் பொருந்தியவராய் நபையோரைக் கவர்ந்திழுத்தார் செல்வி மலர்விழி கருணுநிதி. இவர் பத்மினி குணசீலனின் மாணவியாவார். கவியும் ஜதியும் இசையும் எனது தனித்திறனுக்கு முன்னுல் இரண்டாம் பட்சமே என்று நிரூபித்தார் செல்வி சர்மினி ராஜகோபால். இவர் திருமதி ராகினி ராஜகோபாலின் மாணவியாவார்.



# சாண் சீலை

**– கசின் –** **சிறுகதை**

இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் நான் ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் பொழுது எங்களுக்குக் கற்பித்த ஆசிரியர் உடையலங்காரத்தைப்பற்றிச் சில விபரங்களைத் தெரிவித்தார். இப்பொழுது நான் கொழும்புக் கடற்கரையில் மாலை வேளையிலிருந்து போகும் வரும் ஆண்களையும், பெண்களையும் பார்த்த பொழுது எனக்கு அந்த ஞாபகம் வந்தது.

உடை என்பது அந்தந்த ஊர் வெப்ப தட்ப நிலைகளுககேற்பவும், செய்யும் தொழில்களுக்குக்கேற்பவும் பலவகையாக மாறுபடும். எங்கள் கீழைத்தேச நாகரீகம் பல்லாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்தது. பல பிறதேச நாகரீகங்கள் எங்கள் தேசத்தில் வந்து மோதியிருக்கின்றன. இப்போதைய எங்கள் உடையும், காலப்போக்கில் சீர்திருத்தி இந்நிலைக்கு வந்தது.பொருளாதார காரணத்தினால்சில வித்தியாசங்கள் இருந்தபோதிலும், பொதுப் பார்வை ஒரே தோற்றமாய்த்தான் இருக்கும். பழையசங்க நூல்களிலே வட்டுடை. தட்டுடை என்று பலவகை உடைகள் கூறப்படுகின்றது. இப்போதைய தமிழரின் உடைகள் படிப்படியாகச் சீர்திருத்தி வந்ததாலும். இவை எனது ஆசிரியாசொன்னவை.

இதை நினைத்த பொழுது எனக்கு இன்னொரு கதை ஞாபகத்திற்கு வந்தது. நான் இலங்கை அரசாங்கத்தில் புகையிரதப் பகுதியில் வேலை செய்த பொழுது சில காலம் கொழும்புப்புகைவண்டி நிலையத்தில் புகைவண்டிப் படுக்கை வசதி ஒழுங்கு செய்யும் வேலை பார்த்தேன். அப்பொழுது மிகவும் செல்வந்தரான 'சின்னு' என்ற ஒருவர் என்னிடம் முதல் வகுப்பு படுக்கை வசதி ஒழுங்கு செய்ய அடிக்கடி வருவார். அவருடைய உண்மையான பெயர் என்னவோ? 'சின்னு' என்று தான் எல்லாவற்றிலும் எழுதப்படும். சில சமயம் 'சின்னு' தான் அவருடைய பெயராகவும் இருக்கலாம். இப்பழக்கத்தினால் எனக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டது. என்னை அவருடைய வீட்டிற்கு ஒரு நாள் அழைத்திருக்கிறார். அவர்வீடு கொள்ளுப்பிட்டியில் பெரிய வளவில் அமைந்திருந்தது. பெரிய மாடி வீடும் பின்னால் புற்றரையும் நீச்சல் குளமும் இருந்தது. நீச்சல் குளத்திற்கு பக்கத்தில் வைக்கோலால் வேய்ந்த சிறுகுடிசையும் இருந்தது. சின்னுவிற்குக் கற்றன் பகுதியில் தேயிலைத்தோட்டம் சொந்தமாக இருந்தது. அங்கே போவதற்குத் தான் என்னிடம் இடையிடையே புகை வண்டியில் படுக்கை வசதி செய்ய வருவார். சின்னுவிலும் பார்க்க சின்னுவின்

மனைவி பேசப்பழக நல்ல மாதிரியானவள். அவர் பெயர்என்னவென எனக்குத் தெரியாது. மிஸஸ் சின்னு என்றே எனக்கு ஆகி விட்டது.

எனக்கு யாழ்ப்பாணத்தில் கொஞ்ச நெல் வயல் உண்டு. அதாவது எனது மனைவியின் சீதன வயல் அதை எனது மாமனார் தான் விதைத்து வந்தார். நான் செலவைக் கொடுப்பேன். எங்கள் சாப்பாட்டிற்கு அரிசி புகைவண்டி மூலம் வரும். ஒரு முறை மாமனாருக்குச் சிறிது சுகவீனமான படியால் வயலில் புல் லுப்பிடுங்கி விக்க வேண்டும். இரண்டு வாரம் லீவு பெற்றுக் கொண்டு வரவும் என்று தகவல் வந்தது. தீபாவளியை ஊரில் கொண்டாடுவோம் என்று லீவு பெற்று ஊருக்குச் சென்றோம்.

ஐந்து கூலி ஆட்களைப் பிடித்துப் புல்லுப்பிடுங்கி வித்தேன். அதில் சிறுது வயது சென்ற தம்பதிகள் இருவரும் மூன்று பெண்களும் அடங்குவர். தம்பதிகளுக்கு ஐம்பதிற்கும் அறுபதிற்கும் இடையில் வயது இருக்கும். கணவன் பெயர் பொன்னன். மனைவி பெயர் சின்னி. அவர்களே தலைமை வகித்து மற்ற மூவரையும் கொண்டு நடத்தி எனது வயலில் புல்லுப்பிடுங்கி முடித்தார்கள். காலை ஒன்பது மணிக்கு வந்து ஒரு மணிக்கு போவார்கள். எனக்குப் புல்லுப்பிடுங்கத் தெரியாது. புல்லுக்கும், நெல்லுக்கும் வித்தியாசம் எனக்குத் தெரியாது. அதனால் வயல் வரம்பில் நின்று பார்த்துக் கொள்வேன். வரம்பில் நிற்கும் பொழுது அவர்களுடன் பேச்சுக் கொடுப்பேன்.

வரம்பில் நின்று பேசும் போது பொன்னன், தானும், மனைவியும் ஒருமுறை கதிர்காமம் போய் வரவேண்டும், இறைவன் வழிவிடுகிறார் இல்லை என்று சொன்னான். நான் என்ன தடங்கள் என்று கேட்டேன். போகவும், வரவும் செலவிற்குப் பணம் வைத்திருக்கிறோம். ஆனால் தனியே போய் வர பாஷையும் தெரியாது வழியும் தெரியாது. அதனால் யோசனையாய் இருக்கிறது என்று சொன்னான். சரி நீங்கள் புகைவண்டி மூலம் கொழும்பு வாருங்கள் அதற்கப்பால் நான் உங்களைக் கூட்டிக் கொண்டு போய் கதிர்காமம் காட்டிய பின் திரும்பக் கூட்டி வந்து கொழும்பில் புகைவண்டியில் ஏற்றிவிடுகிறேன் என்று சொன்னேன். உடனே பொன்னனும், சின்னியும் 'முருகா' என்று தலையிலே கைவைத்து வணங்கி மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்கள். தாங்கள் இருவரும் புல்லுப்பிடுங்கின சம்பளமும் என்னிடம் வாங்க மறுத்துவிட்டார்கள்.

அவர்கள் சொன்ன படியே கொழும்புக்கு வந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு தான் அதில் உள்ள பெரிய சிக்கல் எனக்குத் தோன்றியது. யாழ்ப்பாணத்தில் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

கொழும்பில் எங்களுடைய குச்சறையில் சரிசமமாக இருந்து பழக மறுப்பார்கள். எனக்கும் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே சின்னுவிற்குத் தொலைபேசி எடுத்தேன். கதிர்காமம் போக யாழ்ப்பாணத்திலிருந்து தம்பதிகளிருவர் வந்திருக்கிறார்கள் அவர்கள் எங்களுடைய குச்சறையில் தங்கியிருக்கச் சிரமப்படக் கூடும் நாகரீகமான ஆட்கள் புற்றரையிலிருந்து தான் சாப்பிடுவார்கள் குளிப்பதற்குத் தடாகம் வேண்டும் என்று சொன்னேன்.

மிஸஸ் சின்னுதான் தொலைபேசியில் பேசினார். என் மீது கடுமையாகக் கோபித்தார். இந்தச் சின்ன விஷயத்திற்கு எங்களை கேட்க வேண்டுமா? கூட்டிக் கொண்டு விடுவதற்குக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று துள்ளி விழுந்தார்.

உடனே கூலிக் கார் பிடித்து அவர்கள் இருவரையும் கூட்டிக்கொண்டு போய் சின்னு தம்பதிகளிடம் ஒப்படைத்துவிட்டு மறுநாள் காலை வந்து அழைத்துப் போவதாகச் சொல்லி நிம்மதியோடு வந்தேன்.

மறுநாள் காலை நான் அவர்களை அழைக்கச் சென்ற பொழுது சினனு தம்பதிகளும், பொன்னன் தம்பதிகளும் புற்றரையில் நிற்க ஒருவர் படம் பிடித்துக் கொண்டு நின்றார். தூரத்தில் பார்க்கும் பொழுது எனக்கு யார் பொன்னன்? யார் சின்னு? என்று தெரியவில்லை. சின்னு வெறும் கௌபீனத் தோடும், பொன்னன் மடித்துக் கட்டிய வேட்டியோடும் நின்றார்கள். இருவரும் முகச்சவரம் செய்து இரண்டுமாதம் இருக்கும். பொன்னன் கதிர்காமம் போய்த் தான் இனி முகச்சவரம் செய்வது என்று புல்லுப் பிடுங்கிறபோதே சொல்லிவிட்டான். பொன்னனுடைய தாடியில் இடையிடையே நரைமயிர் தோன்றியதால் அடையாளம் கண்டுபிடித்தேன்.

'வெரி நைஸ் கப்பிள்' இராத்திரி எங்கள் அவுட் கவுஸில் ( வைக் கோலால் வேய்ந்த தடாகக்கரைக் கொட்டில் ) படுக்கப்போகிறோம் என்று அடம் பிடித்துப்படுத் தார்கள் என்று மிஸஸ் சின்னு சொன்னார். மிஸ்ரர் சின்னு கண்ணைச் சிமிட்டினார். சின்னுவை நான் கூறு குறுப்பாக பார்த்த பொழுது தனது உடையலங்காரத்தைப் பார்க்கிறேன் என்பதை உணர்ந்து சின்னு 'வெரி நைஸ் டிரஸ், எனி மேல் நீச்சல் தடாகத்திற்கு இது தான்' என்று சொன்னார். மிஸஸ் சின்னுவும் வெரிநைஸ் வெரி நைஸ் என்று ஆமோதித்தார். பொன்னனும் தனக்கு அவர்கள் பேச்சு விளங்கின மாதிரி, 'நாங்கள் தோட்ட வேலைக்கு இந்த உடுப்புத்தான்' என்று சொன்னான். தொடர்ந்து பேச்சை வளர்த்தால் வேறு விபரீதங்களும் ஏற்படலாம் என்று நினைத்து பொன்னனையும், சின்னியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினேன்.

வழியில் புகைவண்டியில் பொன்னனும், சின்னியும் தங்களுக்குள் பேசியதைக் கண்ணை மூடிக்கேட்டுக் கொண்டு இருந்தேன். 'கொஞ்சம் வசதிக்குறைவானவர்கள் என்றாலும் நல்ல சனங்கள்' என்று சின்னி சொன்னாள். அப்படி வசதிக்குறைவானவர்கள் அல்ல சிக்கனமான சீவியம். கார் வைத்திருக்கிறார்கள்' இது பொன்னன்.

'எங்களை இப்ப புகைவண்டிக்குத் தனது காரில் அந்த மனுஷி கூட்டிக்கொண்டு வந்த போது உட்சட்டையோடு தானே வந்தார். எப்படியும் வசதி குறைந்தவர்கள தான்'.

' ஓ. வீட்டிலும் அந்த மனுஷி உட்பாவாடையோடு தான திரிந்தது. பிறத்தியார் வந்திருக்கினமென்று வெட்கப்படவில்லை'. 'வெட்கப்படுவதற்கு வசதியமல்லோ இருக்க வேண்டும்'.

'என்னுடைய சாண் சீலையை அந்த மனுசன் வாங்கிப்போட்டார். மாணிக்க கங்கையில் எப்படிக் குளிக்கிறது?' 'துவாயைக் கட்டிக் கொண்டு குளியுங்கோ போற வாற இடத்தில் சாண்சீலையோடு குளிக்க உங்களுக்கு வெட்கமில்லையா?' அவர்கள் சம்பாஷணையைக் கேட்டு எனக்குச் சிரிப்பு அடக்கமுடியவில்லை. பொன்னன் சின்னுவுக்குக் கொடுத்த சாண்சீலை என்பது கௌபீனம். இது நன்னூல் என்றும், தமிழ் இலக்கண நூலில் கூறிய 'இடக்கரடக்கல்' என்ற கூற்றுப்படி யாழ்ப்பாணக் கிராமங்களில் 'சாண்சீலை' என்று சொல்வார்கள். கௌபீனம் என்று ஆறுமுக நாவலா சைவ வினா விடையில் சொல்லப்பட்டிருக்கிறது. கோவணம், கோமணம் என்பதும் இதுவே. இடக்கரடக்கலாக வந்த சொல்லே சாண்சீலை. சின்னுவீட்டில் நடந்த இன்னுமொரு சம்பவத்தை அவர்களிடம் தெரிந்து கொண்டேன். சின்னியின் காதுத் துவாரம் ஒரு விரல் போகக் கூடிய பெரியது. அவளுடைய பேரப் பெண் தேயிலைப் பெட்டியின் ஈயக்கடதாசியை பூப்போல வடிவாகச் செய்து அவளின் காதுத் துவாரத்துள் பொருத்தி அனுப்பியிருந்தாள்.

மிஸஸ் சின்னு 'இது வெரி நைஸ்' என்று அதைத் தான் அணிந்து கொண்டு தனது காதிலே இருந்த பெரிய செப்பு வளையத்தைச் சின்னிக்கு அணிந்துவிட்டிருந்தாள். கையிலும் பெரிய உலக்கைப் பூண் போன்ற செப்பு வளையத்தைப் போட்டு அனுப்பியிருந்தாள். சின்னி செப்பு வளையத்தைக் கையில் அணிந்திருக்க வெட்கப்பட்டுக் கழற்றித் தனது கைப்பையில் வைத்துக் கொண்டாள்.

பல வருடங்களின் பின் கொழும்பு பம்பலப்பிட்டிக் கடற்கரையில் நின்று போவோர், வருவோரைப் பார்த்த பொழுது இந்தப் பழைய சம்பவங்களை இரைமீட்டு என்னுக்குள் தானே சிரித்துக் கொண்டேன்.

# புலம் பெயர்ந்தோர் நலன்பெறச்

## சில கேள்விகளும் அவற்றின் பதில்களும்

**பிரித்தானிய அகதிகள் சபையின் அகதிகள் வேலை வாய்ப்பு உத்தியோகத்தர் திரு.நாதன் அவர்களுடன் ஓர் கலந்துரையாடல்**

**கேள்வி? இங்கு அரசியல் தஞ்சம் புகுபவர்களை எத்தனை வகையாக வகுக்கிறார்கள்?**

பதில்– மூன்று வகைகளாக வகுக்கலாம்.

1. தற்காலிக அனுமதி
2. Exceptional leave to remain
3. அகதி அந்தஸ்து

பின்வரும் காரணங்களில் ஏதாவதொன்றைக் காரணங்கொண்டு Exceptional leave to remain நிலை கொடுக்கப்படுகின்றது.

அக்காரணங்களாவன

அ. பிரச்சனைக்குரிய நாடுகளில் இருந்து வந்த அந்நாட்டினர் அனைவருக்கும் பொதுவான ஏற்றுக்கொள்கை.

ஆ. ஒரு குறிப்பிட்ட இன, மத, சாதி அல்லது குழுவினருக்கு அந்நாட்டில் பிரச்சனை இருந்து அவர்கள் இங்கு வரும் பட்சத்தில்

இ. விண்ணப்பம் கோருபவரது தனிப்பட்ட பாதுகாப்புக்கருதி

**கேள்வி ? பொதுவாக இங்கு தஞ்சம் புகுபவர்களுக்கு எத்தனை வருட விசா கொடுக்கிறார்கள்?**

பதில்– முதலில் ஒரு வருடமும் அடுத்து 3 வருடங்களும் அதன் பின்னர் 3வருடங்களும் கொடுக்கிறார்கள். ஏழு வருடங்களின் பின்னர் நிரந்தரமாக இங்கு தங்குவதற்கான விண்ணப்பத்தை குடிவரவுத் திணைக்களத்திற்கு அனுப்பலாம். நிரந்தர விசா கிடைத்து ஒரு வருடத்தின் பின்னர் பிரித்தானிய பிரஜைக்காக விண்ணப்பிக்கலாம். குடியகல்வு அதிகாரி தனது அதிகார நிமித்தம் நிராகரிக்கவோ அனுமதி வழங்கவோ முடியும்.

**கேள்வி ? தற்காலிக அனுமதி பெற்றவர்களின் நிலை என்ன?**

பதில்– தற்காலிக அனுமதி பெற்றவர்களின் விண்ணப்பங்கள் 6 முதல் 14 மாதங்களில் பரிசீலிக்கப்படுகின்றன. இந்நாட்களில் 18 மாதங்களின் பின்னர் கூடப் பரிசீலிக்கப்படுவதில்லை. காரணம் போதிய உத்தியோகத்தர்கள் இல்லாமையே.

கேள்வி– அரசியல் தஞ்சம் கோரி இங்கு வருபவர்கள் எத்தகைய பத்திரங்களை இங்கு கொண்டு வரவேண்டும்?

பதில்– உண்மையான அகதியாக வரும் ஒருவர் எந்தவொரு பத்திரத்தையும் கொண்டு வரத்தேவையில்லை.

கேள்வி? பாஸ்போட்டைக் கிழித்து விட்டு வருபவர்கள் மீண்டும் எப்படிTravel Documents பெறுவது?

பதில்–116 என்ற பத்திரத்தையும் Travel Document விசா விண்ணப்பத்தையும் நிரப்பிக் குடியகல்வுத் திணைக்களத்திற்கு அனுப்பினால் மண்ணிற நிறத்தில் ஒரு பிரயாணப் பத்திரம் (Travel Document) குடியகல்வுத் திணைக்களத்தில் பெற முடியும்.

கேள்வி– வருமான ஆதாயப்பணம் எடுப்பவர்கள் இங்கு தங்கள் படிப்பைத் தொடரலாமா?

பதில்– பகுதி நேரமாகத் தங்கள் கல்வியைத் தொடரலாம். வேலை வாய்ப்புப் பயிற்சிகளில் ஈடுபடலாம். ஆனால் அரச வேலைவாய்ப்புப் பயிற்சிகளில் ஈடுபட வேண்டுமாயின் இங்கு வந்து 6 மாதங்கள் கழிந்திருக்க வேண்டும்.

கேள்வி– உண்மையான அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் அத்தாட்சிகள் எவை?

பதில்– அவர்களுக்கு நீல நிற Travel Document வழங்கப்படும். அவர்களது பொருளாதார, நலன், பாதுகாப்புக்கு இந்நாடு உத்தரவாதம் அளிக்கிறது.

கேள்வி– கல்வி கற்பதற்கான உதவிப்பணத்தைக் council மூலம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் என்ன?

பதில்– தொடர்ந்து 3 வருடங்கள் ஒரு council இன் கீழ் நீங்கள் வசிப்பீர்களாயின் அக் councilஇல் நீங்கள் உதவிப் பணத்திற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் முடிவு அவர்களைப் பொறுத்தது.

கேள்வி ? அண்மையில் இங்கு அரசியல் தஞ்சம் கோரியோர் வேலை செய்யலாமா?

பதில்– இல்லை. ஆறு மாதங்களுக்கு அவர்கள் வேலை செய்யக்கூடாது. அதுவரை அரசு கொடுக்கும் உதவிப்பணத்திலேயே இருக்க வேண்டும். இதன் பின்னர் அவர்கள் வேலை அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

*கேள்வி ? இந்தியா இலங்கைக்கு அகதிகளைத்திருப்பி அனுப்புதல் இங்குள்ள அகதிகளைப் பாதிக்குமா?*

பதில்- இல்லை.அது அவர்களது உள்ளூர் அரசியல் விவகாரம். அது மட்டுமன்றி அவ்வகதிகள் தாங்களாகவே இலங்கைக்குப் போகிறோம் என்று கூறியபடியால்தான் (எழுதி வாங்கிய பின்னர் தான்) அனுப்பப்படுகிறார்கள்.

*கேள்வி ? வேறு ஐரோப்பிய நாடுகளில் இருந்து இங்கு அரசியல் தஞ்சம் கோரி வரலாமா?*

பதில்- இல்லை. ஆனால் சில சிக்கலான சமயங்களில் குடியகல்வு செயலாளரினால் இவ்விண்ணப்பங்கள் கருத்திற்கெடுக்கப்படுகின்றன. அவையாவன

அ. பிள்ளைகளின் கல்வி வசதிக்காக

ஆ. சிறந்த மருத்துவ வசதிக்காக(தீராத சில நோய்களைத் தீர்க்க)

இ. கூடுதலான உறவினர்கள், நண்பர்கள் இங்கு இருப்பின்

*கேள்வி-அகதிகளாக வந்த குடும்பங்கள் தங்களது உறவினர்களுடன் சேர வாய்ப்புண்டா?*

பதில்- அகதி அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள் தங்கள் நேரடி உறவினர்களைக் கூப்பிட வாய்ப்புண்டு. Exceptional leave இல் வந்தவர்களும் 4 வருடங்கள் தொடர்ச்சியான அனுமதி கிடைப்பின் குடும்பச் சேர்வுக்கு(family Union) விண்ணப்பிக்கலாம். இங்கு 4 வருடங்கள் தொடர்ந்து இருந்தவர்கள் தங்கள் சூழ்நிலை பற்றி குடிவரவுத் திணைக்களத்திற்கு அறிவித்தால் அவர்கள் பரிசீலனை செய்வார்கள். ஆனால் முடிவு அவர்களைப் பொறுத்தது.

*கேள்வி ? உடனடி உறவி னர்கள்(Immediately family) என்றால் யாவர்?*

பதில்- கணவன்-மனைவி, 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளும் அவர்களது பெற்றோர்களும்

*கேள்வி ? உடனடி உறவினர்களை(Immediately family) இங்கு அழைப்பது எவ்வாறு?*

பதில் - அகதி அந்தஸ்து அல்லது Exceptional leave இல் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாக இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர் இல்லத்தில் (British High Commission) விண்ணப்பிக்க வேண்டும். அக்கடிதத்தின் பிரதியொன்றை தங்கள்

குடும்பத்திற்கும் அனுப்ப வேண்டும். பிரதியொன்றை இங்குள்ள குடியகல்வுத் திணைக்களத்திற்கும் அனுப்பலாம். ஆனால் விண்ணப்பம் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை இலங்கையிலுள்ள உயர் ஸ்தானிகருக்கே உண்டு. தங்கள் குடும்பம் இங்கு வந்தால் எந்த வித காரணங் கொண்டும் அரச நிதி பெறவோ அன்றி அரச வீடுகள் பாவிக்கவோ முடியாது. தங்கள் சொந்த வருமானத்தில் இவர்களைப் பராமரிக்க வேண்டும்.

4வருடங்கள் தொடர்ந்து இங்கு இருந்தவர்கள் ஏன் தங்கள் குடும்பம் அங்கு இருக்க முடியாது என்பதற்கும் ஏன் இங்கு அவர்கள் வர வேண்டும் என்பதற்கும் முறையான காரணங் காட்டி இங்குள்ள குடியகல்வுத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். முடிவு அவர்களைப் பொறுத்தது.

*கேள்வி ? இங்கு வரும் அகதிகள் தமது கல்வியை விட வேறு ஏதாவது பயிற்சித் திட்ட உதவிகளை எவ்வாறு பெறலாம்?*

பதில் - அகதி அந்தஸ்து விண்ணப்பித்த எவரும் உடனடியாக எங்கும் தமது கல்வியைத் தொடங்கலாம். ஆனால் அவருக்கு பிரித்தானிய பிரஜையின் கல்விக் கட்டணமா அல்லது வெளி நாட்டு மாணவர் கல்விக்கட்டணமா வசூலிப்பது எனத் தீர்மானிப்பது அந் தந்த பாடசாலைகளேயன்றி இங்குள்ள குடியகல்வுத் திணைக்களம் அல்ல. பொதுவாகப் பல பாடசாலைகள் இலங்கைத்தமிழ் மாணவரின் அறிவுத்திறனை மெச்சி உள்ளூர் மாணவருக்கான கட்டணத்தையே அறவிடுகின்றார்கள். உதாரணமாக சிற்றி யூனிவேசிற்றி, மேட்டன் பாடசாலை. அரச வேலை வாய்ப்புத்திட்டத்தில் சேர விரும்புபவர்கள் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

1. 6 மாதங்களுக்கு வேலை அற்றோராகப் பதியப்பட்டிருத்தல் வேண்டும்.
2. வேலை அனுமதி பெற்றிருக்க வேண்டும். (Work permit)
3. 18- 60 வயது இருக்க வேண்டும்.

## வாசகர்களுக்கு-

**இப்பகுதியில் நீங்கள் உங்கள் சந்தேகங்களைக் கேட்க விரும்பின் பின்வரும் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பலாம்.**

**Alai Osai, 109 Philip Lane, Tottenham, London N15 4JR**

வாசகர் கடிதங்கள்

பொங்கல் மலருக்கான அட்டைப்படம் நான்கு நிறங்களில் மிகவும் கவர்ச்சியாக இருந்தது. தொடர்ந்தும் இப்படி வெளியிடுங்கள்.

ராஜஸ்ரீ எட்மன்ரன்

புத்தகத்தை ஏனய்யா சிறுப்பித்தீர்கள்.சரக்கு இல்லையாயின் நிருபர்களை அனுப்பி எடுப்பது தானே? இப்படியா வெட்டுவது?

அருள்ஜோதி நீஸ்டன்

நிரந்தரத்தாய். இன்டர்வியூ சிறுகதைகள் மிகவும் ர்சனையாகவும் மனத்தைத் தொடும் வகையிலும் அமைந்தன. எழுத்தாளர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

ரகுமான் வால்த்தம்ஸ்ரோ

லண்டன் செய்திகளில் படங்களைக் காணோமே. ஏன்?

விமலா வான்ஸ்வேர்த்

சிறிய புத்தகமாயுள்ள அலை ஓசை கைக்கு அடக்கமாகவும் வாசிப்பதற்கு சுலபமாகவும் இருக்கிறது. தொடர்ந்தும் இப்படியே வெளியிடுங்கள்.

சார்ள்ஸ் கிலிங்டன்

குறுக்கெழுத்துப் போட்டி அழகாக இருக்கிறது.ஆனால் நிரப்பத்தான் முடியவில்லை.எப்படி நிரப்பினாலும் பிழைக்கிறதே?

பிரேம் நோர்வே

அன்பு ஆசிரியரே. உங்கள் புத்தகத்தில் நகைச்சுவை. துணுக்குகள் மற்றும் சிறுகுறிப்புகள் இடம் பெறுவது மிகக் குறைவு. தயவுசெய்து அவற்றில் கூடிய கவனம் எடுங்கள். இவைதான் பத்திரிகைகளின் தராதரத்தையும் கூட்டி கவர்ச்சியையும் ஏற்படுத்தும். நன்றி

பாலமனோகரன் பாரிஸ்

அன்புள்ள ஆசிரியருக்கு!

ஏன் ஐயா அலை ஓசையை இவ்வளவு சிறிதாக்கினீர்கள். விலைவாசி உயர்வு காரணமா? அல்லது வேறு ஏதாவதா?
இம்மாம் பெரிய புத்தகத்தைப் பார்த்த எனக்கு இத்தூண்டு சிறுசாப் பார்க்கச் சகிக்கவில்லை

— பரம் — சவுத்தோல்

அன்புள்ள ஆசிரியருக்கு!

புத்தகவடிவில் ஏற்பட்ட மாற்றம் வரவேற்கத்தக்கது. தை பிறந்தால் வழிவகுக்கும் என்பது போல் அலை ஓசையும் வளர வழிபிறக்கும் என்பது நிட்சயம்.

— கண்ணன் — கிங்ஸ்பரி

ஆசிரியருக்கு!

புதிய வடிவில் வந்த அலை ஓசை வரவேற்கத்தக்கது. தொடர்ந்தும் இந்த வடிவில் வருவதையே நான் விரும்புகின்றேன்.

— கலை அரசி — விம்பிள்டன்

கவிதைகள் போதாது. கவிதைகளின் தரமும் உயர்த்த வேண்டும். ஆவன செய்யுங்கள்

— சாந்தி — இல்பேட்

சங்கங்களுக்குள் நடக்கும் சமர்களைப்பற்றி நீங்களும் சற்றுச் சுவைபட எழுதலாமே? கிசு கிசு பக்கம் ஒன்றை உடனும் தொடங்குங்கள்.

— சுந்தரம் — வோல்தம்ஸ்ரோ

சிறுகதைகள் சிறுகதைகளாகவே வரட்டும். நெடுங்கதைகளாக்காதீர். அடுத்த இதழ் வரை காக்க வைக்காதீர்

— மனோகரன் — ஜேர்மனி

பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவை நினைவுகூருமுகமாக அவரது திருவுருவத்தை அலை ஓசை அட்டைப்படமாகத் தாங்கி வெளிவருவதில் பெருமைப்படுகிறது.

- ⇨ Immigration Problems/ Visa Refusals
- ⇨ Employment/ Redundancies
- ⇨ Emmigration to Australia/ Canada
- ⇨ Mortgages/ House Purchase
- ⇨ General Legal Advice/ Litigation

Contact

# Ratnam & Co Solicitors

Tel: 081 - 861 1964


## Alai Osai - அலை ஓசை

**Subscription Rates** (12 copies) £9.60 only
(E.E.C. Countries £10.80. All other Countries £12.00)
Payment made by Cheque or Money order
Payable to "Waltham Forest Thamil Sangam(Alai Osai)"
Please complete this form and post to
Alai Osai Publications
Waltham Forest Thamil Sangam
109, Philip Lane, London N15 4JR

Name:..............................................................................

Address:..........................................................................

..........................................................................

Tel No:..........................................

| ............................ | ................ | ................ |
|---|---|---|
| Signature | Date | Starting month |

# CAPITAL AUTOS

## VW AUDI SPECIALISTS

307 - 311 SPROWSTON MEWS, FOREST GATE E7
(Rear of 311 Romford Road)

Telephone: 081 - 519 3041 081 - 519 6187
Mobile: 0860 485247 0860 570031





SPECIALIST
IN AUDI
SECOND HAND
SPARES
SERVICING ELECTRONIC TUNING
PRE - MOT CHECKS. ALL MECHANICAL &
ACCIDENT REPAIRS. RESPRAYS. WELDING.
INSURANCE WORK. FREE ESTIMATES